"MATHAR MARUMANAM."

# மாதர் மறுமணம்




மலர் 3. இதழ் 12

பிரமாதி ஆடி

Annas 1½. 10 Cts.

# "மாதர் மறுமணம்" சந்தா விபரம்.

வருஷ சந்தா இந்தியா, சிலோன் முதலிய
உள்நாட்டுக்கு ... ரூ. 1—0—0

பர்மா, மலாயா, சைகோன், தென்னுபிரிக்கா முதலிய
வெளிநாட்டுக்கு ... ரூ. 1—8—0

தனிப்பிரதி ... ... ரூ. 0—1—6

வி. பி. மூலம் அனுப்ப இயலாது. முன்பண மாகவே செலுத்த வேண்டும். வெளிநாட்டிலுள்ளவர்கள் 2ஷில்லிங் 6 பென்ஸ் அனுப்ப வேண்டும்.

விலாச மாறுதலுக்கு சந்தா எண்ணைக் குறிப்பிட்டு கடிதமெழுதவும் மாதிரிப்பிரதி வேண்டுவோர் 1½ அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

காரியதரிசி,
மாதர் மறுமண சகாய சங்கம், காரைக்குடி

# உள்ளுறை


வேண்டுவது (பாட்டு) —செட்டிமார்நாட்டு விகடன் .... 1

தற்காலத்துக்கு ஒவ்வாத ஜாதி மதாச்சாரங்கள் —டர்பன் திருமதி. ச. மு. பார்வதி பிள்ளை .... 2

தாய் தந்தையர் வரன் தேர்ந்தெடுத்தல் —ப. நீ. .... 4

என் மாதாவின் மலரடிகட்கு —டர்பன் திரு. ச. முனிசாமி பிள்ளை .... 9

என் மணம் —சு. நாராயணன் .... 13

ஆணும் பெண்ணும் —AL. நடராஜன் .... 15

இளமை மணம் —S. T. R. சாதி .... 24

வேளாள சமூக கட்டுப்பாடும் விதவைகளின் கண்ணீரும் —வே. ஸ்ரீனிவாசன் .... 25

ஜவாப்தாரி யார்? —குன்றை மு. பெத்தையா .... 28

தியாக குமாரி —பி. தனுஷ்கோடி .... 31

பெண் கல்வி எப்படி இருக்க வேண்டும் .... 36

ஸ்திரீ தர்மம் .... .... .... 37

பன்னிரண்டு தீமைகள் .... .... .... 39

ஹிந்து மதத்தை காப்பதில் ஸ்திரீகளே சிறந்தவர்கள் .... 41

நிகழ்ச்சிகள் .... .... .... 42

# குமரன் புத்தகசாலை.

### வ. உ. சிதம்பரம் பிள்ளை எழுதியது.

| | |
|---|---|
| மனம்போல வாழ்வு | 0-8-0 |
| திருக்குறள் (அறத்துப்பால்) | 1-0-0 |
| மெய்யறம் | 0-8-0 |
| சாந்திக்கு மார்க்கம் | 0-8-0 |
| அகமே புறம் | 0-8-0 |
| மெய்யறிவு | 0-8-0 |

### வ. வே. சு. ஐயர் எழுதியது.

| | |
|---|---|
| சந்திரகுப்த சரித்திரம் | 0-6-0 |

### இதர புத்தகங்கள்.

| | |
|---|---|
| ஞான வாசிட்ட மூலமும் உரையும் 2 பாகமும் | 6-0-0 |
| நைடதம் மூலமும் உரையும் | 4-0-0 |
| சிதம்பர ரகசியம் | 0-8-0 |
| உப்பள முற்றுகை | 0-4-0 |
| பக்தியோகம் | 0-8-0 |
| தேவோபாசன தீபம் | 0-6-0 |
| பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை (சீர்திருத்தக்கதை) | 0-4-0 |
| மநுநீதி மர்மம் | 0-2-0 |
| ரோமியோ ஜூலியட் (ஷேக்ஸ்பியர் நாடகக் கதை செய்யுள்) | 0-4-0 |
| இகபரஞானசாகரத் திரட்டு | 0-6-0 |
| பெரிய விக்கிரமாதித்தன் கதை | 1-0-0 |
| தாசிகள் மோச வலை (நாவல்) | 1-4-0 |
| நந்தனார் கீர்த்தனை | 0-4-0 |
| தோத்திரக்கோவை | 0-6-0 |
| இராமாயண ஆராய்ச்சி | 0 4-0 |
| சொர்னவல்லி | 0-12-0 |
| கூழைரங்கன் | 0-12-0 |
| அமிர்தவல்லிமாலை | 0-3-0 |
| நமது பலசரக்குக்கடை | 0-6-0 |
| நாயன்மார் | 0-3-0 |
| குட்டிச்சாத்தான் கட்டுரைகள் | 0-3-0 |
| பதிற்றுப்பத்தந்தாதி | 0-3-0 |
| மாதர்மறுமணம் | 0-4-0 |
| பத்மநாதன் அல்லது களவுபோன வைரப்பதக்கம் | 0-12-0 |
| மானநஷ்ட வழக்கு | 0-1-0 |
| ஜீவகாருண்யத் திருக்குறள் | 0-6-0 |
| ஜீவகாருண்யப்பாடல் திரட்டு | 0-3-0 |
| சந்திரமதி அல்லது தற்காலத்து தமிழ் மகள் | 0-2-0 |
| கைம்பெண்ணின் கண்ணீர் | 0-1-0 |
| தேசீய கீதங்கள் | 0-2-0 |
| காசில்லாமல் உபதேசம் | 0-1-0 |
| பலதிரட்டு | 0-1-0 |
| கடவுளும் கோயிலும் | 0-1-0 |
| சமரச சன்மார்க்க தோத்திரத்திரட்டு | 0-4-0 |
| சைவசமய சாரம் | 0-1-0 |
| சுயராஜ்யம் யாருக்கு? | 0-1-0 |
| மாதர் மறுமணப் பாடல் திரட்டு | 0-2-0 |
| அநியாயக் கல்யாணம் | 0-0-6 |
| இரண்டு கட்டுரைகள் | 0-1-0 |
| தமயந்தி நாவல் | 0-8-0 |
| சோதிடப் புரட்டு | 0-2-0 |
| சுயமரியாதைத் தாலாட்டு | 0-2-0 |
| புராண ஆபாசங்கள் | 0-3-0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0-2-0 |
| சுயமரியாதைத் தத்துவ கீதங்கள் | 0-3-0 |
| சுயமரியாதைப் பாடல் | 0-2-0 |

**மானேஜர், 'குமரன்' ஆபீஸ், காரைக்குடி.**

சிவகுருநாதன்,
செந்தமிழ் நிலயம்.
கும்பகோணம்.

# மாதர் மறுமணம்.

பத்திராதிபர்:— மு. மரகதவல்லி.

| மலர் 3 | காரைக்குடி<br>பிரமாதி-ஷூ ஆடி-மீ | இதழ் 12 |
|---|---|---|

## வேண்டுவது!

(செட்டிமார்நாட்டு விகடன்)

(ஏற்ற ராகத்தில்)

மாதர் மறுமணம் வேண்டுமடி! —பெண்
மாட்சிமை பெற்றிட வேண்டுமடி!
காதல் மணங்களே வேண்டுமடி! —வீண்
கட்டு முறிந்திட வேண்டுமடி!

இளமணம் அழிதலே வேண்டுமடி! —பெண்
இன்கல்வி யோங்கிட வேண்டுமடி!
களவுக ளேகிட வேண்டுமடி! —கொடுங்
கைமைகள் நீங்கிட வேண்டுமடி!

வைதீகம் வேரற வேண்டுமடி! —பெண்
வாழ்க்கையில் வீரமே வேண்டுமடி!
ஐதீகம் ஓடிட வேண்டுமடி! —மூட
அவதிகள் செத்திட வேண்டுமடி!

அணியாடை யெப்போதும் வேண்டுமடி! —தாலி
அகற்றும விருந்திட வேண்டுமடி!
துணிவுறு மறுமணம் வேண்டுமடி! —பெண்
துங்கமே பெற்றிட வேண்டுமடி!

# தற்காலத்துக்கு ஒவ்வாத ஜாதி மதாசாரங்கள்

(தென்னுப்பிரிகா டர்பன்-திருமதி. ச. மு. பார்வதி பிள்ளை எழுதியது)

உலகத்திலுள்ள பல மதங்களில், வேறு எந்த மதத்திலுமில் லாத ஆச்சரியமான ஜாதி ஆசாரமும் வழக்கங்களும் இந்து மதத்துக்கு மட்டில் தர்ம சாஸ்திர மூலமாய் விதிக்கப்பட்டிருக் கின்றன. இந்துக்கள் மட்டும்தான் பரலோகத்தில் உத்தம கதி யடைகிறார்களென்றும், மற்ற மதஸ்தர்கள் அப்படி அடைகிற தில்லையென்றும் நினைத்து, இந்துக்களையும் அவர்கள் சாஸ்திரத் தையும் கொண்டாட யாதொரு பிரத்தியக்ஷ பிரமாணத்தையும் காண முடியவில்லை. ஜீவாத்மாக்களில் ஆண் பெண் இரு பாலாரும் சரிசமானமே யன்றி ஒரு உயிரை சிரேஷ்டமாகவும், மற் றொன்றை தாழ்ந்ததாகவும் பாவிக்க நியாயமில்லை. ஆனால் புரு ஷர்களுக்கு மட்டில் அதிக சுதந்திரம் வைத்துக்கொண்டு ஸ்திரீ களுடைய சுதந்திரத்தைக் குறைத்து அவர்களை அடிமைக்கும் ஆடு மாடுகளுக்கும் கீழ்த்தரமாய் நினைத்து புருஷர்கள் நடத்தின லும், அதற்கும் உட்பட்டு இருப்பதே ஸ்திரீகளுடைய கடமை யென்று, முன்னோர்களால் விதிக்கப்பட்ட தர்ம சாஸ்திரம் கூறுகிறது. இப்படிப்பட்ட பக்ஷபாதம் அவர்களுக் குண்டான காரணத்தை அறிய முடியவில்லை. அந்த சாஸ்திரமெல்லாம் கிருத் யுகத்தில் விதிக்கப்பட்டதாயும் இக் கலி கால சுபாவத்துக்கு நேர் விரோதமாயும் இருக்கின்றன. இந்து ஜனத் தொகையில் சரி பாதியாகிய ஸ்திரீகள் மிகுந்த கஷ்டத்துக்கு உள்ளாகி மற்ற உலகத்தார் அனுபவிக்கும் சுகத்தை இழந்து க்ஷீணித்துப் போகிறார்கள். இந்த நிலைமையிலிருந்தால் இந்து மதம் இன்ன மும் வெகு காலம் நீடித்திருக்குமென்று எந்த தீர்க்கதரிசியாலும் சொல்லமுடியாது. தற்காலத்தில் நமது முன்னேற்றத்திற்கு இவ் வளவு தீங்கு இழைக்கிற புராதன சாஸ்திரங்களை அவசியமான மட்டில் காலத்துக் கொத்தபடி சீர்திருத்திக் கொண்டு, நமக் குள்ள கஷ்டங்களைக் குறைக்க வழி தேடாமல் இன்னமும் அந்த

சாஸ்திரங்களைப் புகழ்ந்து பேசிக்கொண்டு நமது முன்னேற்றத்தைத் தடை செய்கிற வகுப்பார் நமக்குள் இருந்து கொண்டு முன் செல்ல விடாமல் நம்மைத் தடுக்கிறார்கள். புத்தி சூக்ஷ்மத்தில் இந்துக்களை மிஞ்சியவர் எவருமில்லை. ஆனால் ஒற்றுமையும் தைரியமுமில்லாமல் நாம் க்ஷீணித்துப் போகிறோம். இந்து தர்மசாஸ்திரத்தை அனுஷ்டிக்கும் நமக்குள் நியாய விரோதமாயும் பக்ஷபாதமாயும் இருக்கும் சில சங்கதிகளைப் பின் குறிப்பிடுகிறேன்.

1. புருஷன் ஆயுசுள்ள வரையில் பல ஸ்திரீகளை விவாகம் செய்து கொள்ளலாம்; விவாகம் செய்தவளைக் காரணமின்றி தனக்கிஷ்டமான போது விலக்கிவிட்டு, வேறு ஸ்திரீகளை விவாகம் செய்யலாம். பத்னி யுள்ளவனும் பிரம்மசாரியும் பல ஸ்திரீகளுடன் பகிரங்கமாய் விபசாரம் செய்யலாம். அப்படி செய்கிறவனுக்கு பகிஷ்காரம் முதலிய யாதொரு தடையுமில்லை.

2. ஊமை, குருடு, செவிடு, நொண்டி, முடம், பெருவியாதி குஷ்டம், விகாரம் முதலிய எல்லா புருஷர்களும் விவாகம் செய்து கொள்ளலாம். ஆனால் அப்படிப்பட்ட பெண்கள் மட்டும் விவாகத்துக்கு அருகரல்ல. அவள் ஆயுசுவரையில் பதி யில்லாதவளாயும் ருதுவான பிறகு ஜாதிப் பிரஷ்டையாகவும் இருக்க வேண்டும்.

3. குடும்ப சொத்தில் புருஷனுக்குப் பாகமுண்டு. ஸ்திரீகளுக் கில்லை.

4. புருடர்கள் சுயேச்சையாகச் சஞ்சரிக்கலாம். ஸ்திரீகள் அப்படிச் செய்தால் தூஷிக்கப்படுவார்கள். காரணமின்றி அடுத்த வீட்டுக்குக் கூட அவள் போகவே கூடாது.

5. புருஷர்கள் வேதம் ஓதலாம்; ஸ்திரீகளுக்கு அந்த சுதந்தரம் இல்லை.

6. விவாகம் முடிந்தபின் அதே தினத்தில் கணவன் இறந்தாலும் பிறகு ஆயுசு வரையில் மனைவி விதவையாகவே இருக்க வேண்டும். பர்த்தாவுக்கு சந்நியாசம் ஜாதிப் பிரஷ்டம், தேசப் பிரஷ்டம், தீர்க்க ரோகம் முதலிய எவ்வித காரணமிருந்தாலும் மனைவி ஆயுசு வரையில் புனர் விவாகம் செய்து கொள்ளக் கூடாது.

7. ருதுவுக்கு முந்தி விவாகம் செய்யாவிடில், பிறகு அவளுக்கு விவாகமில்லை. ஜாதிப் பிரஷ்டையாக விதவை போலிருக்க வேண்டும். விவாகத்துக்கு முன் ருதுவான பெண்ணை வைத்திருக்கும் பிதாவும் பிறகு அவளை விவாகம் செய்யும் பர்த்தாவும் பதிதராவார்கள்.

8. தனக்கு வயது வந்த பின் அவள் வெறுக்கக்கூடிய கிழவன் அல்லது ரோகிக்கு ஒரு வயதுக் குழந்தையாய் இருக்கையில் அவளுக்கு தகப்பனால் செய்யப்பட்ட விவாகத்துக்கு ஆயுசு வரையில் அவள் கட்டுப்படவேண்டும். வயது வந்தபின் இந்த அக்கிரம விவாகத்தை ரத்து செய்து புனர் விவாகம் செய்து கொள்ள அவளுக்குப் பாத்தியமில்லை. விவாக காலத்தைக் குறிக்கும் சாஸ்திரத்தில் நிர்வாணமாய் தெருப் புழுதியில் விளையாடி வரும் 3 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளின் விவாகத்தை சம்வர்த்தர் என்கிற மகிரிஷி மிகவும் சிலாகித்துப் புகழ்ந்து பேசுகிறார். அப்படிப்பட்ட குழந்தைக்கு விவாகமானவுடன் பதியை இழந்தால் பிறகு ஆயுசு வரையில் அவளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் சிக்ஷையை நன்றாய் உணர்ந்த மகரிஷி பெண்குழந்தை விஷயத்தில் இரக்கமில்லாமல் ஏன் இப்படிப்பட்ட சாஸ்திரத்தை விதித்தாரோ நமக்குத் தெரியவில்லை.

---

வாழ்க்கைச் சித்திரம்

# தாய் தந்தையர் வரன் தேர்ந்தெடுத்தல்

( ப. நீ. )

'கணவனும் மனைவியும்' ஒத்த மனப் பண்பினராக இல்லாததற்குக் காரணம் தாய் தந்தையரின் தவறுதலே என்று சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம். தாய் தந்தையர் தவறு செய்கிறோமென்கிற உணர்ச்சியின்றியே தவறைச் செய்கின்றனர். ஒரு பெண்ணுக்கு கணவனை அல்லது ஒரு ஆணுக்குப் பெண்ணைத்

தேர்ந்தெடுக்கும் முழுப்பொறுப்பும் தாய் தந்தையரைச் சார்ந்தது தான் என்று அவர்கள் நினைக்கின்றார்கள். இந்த ஏகபோக உரிமையில், உரியவர்களான பெண்ணோ, ஆணோ அபிப்பிராயங் கூறுவது மிகத் தவறென எண்ணுகின்றனர். இது பரம்பரையாக எத்தனையோ தலைமுறையாக நடந்துவருகிற காரியத்திற்கு-வழக் கத்திற்கு விரோதமென்றும் கருதுகின்றனர்.

தாய் தந்தையர் தங்கள் குமாரனுக்கு ஒரு பெண்ணைப் பார்க் கிறார்கள். பெண் அவர்களுக்குப் பிடித்திருந்தால் போதுமானது! இப்படித் தேர்ந்தெடுத்தலில் துவேஷமோ கெட்ட எண்ணமோ இருக்க முடியாது; இல்லையென்றே நாம் நிச்சயமாகச் சொல்ல லாம். ஆனாலும், அவர்கள் செய்வது குற்றம் குற்றமே. தற் காலத்திய வாலிபன் யாராவதொருவன் தாய் தந்தையரைப் பார்த்து "பையனுக்குப் பெண் பிடித்திருக்கிறதல்லவா? என்று கேட்கிறான். இந்தக் கேள்வியைக் கேட்டவன் அந்தத் தாய் தந்தையருக்கு தவறான மனிதனாகக் காணப்படுகிறான். மிக வேண்டா வெறுப்பாக விளக்கெண்ணெய் குடித்தவர்களைப்போல "நாங்கள் அவ்வளவு தூரம் போகிறதில்லையய்யா" என்கின்றனர். 'அவ்வளவு தூரம்' என்று வரையறுத்துச் சொல்லும் தவறான இடத்துக்கு அவர்கள் போவதில்லையாம்!

கொஞ்சம் படித்த வாலிபர்கள் பெண்ணைப் பார்க்கவேண்டு மென்று தாய் தந்தையரிடம் கேட்டு விடுகின்றனர். தாய் தந்தை யரும் இதற்கு இசைகின்றனர். ஆடவர்களுக்கு இந்த உரிமை சாதாரணமாக மறுக்கப்படுவதில்லை தற்காலத்தில். ஆனால் தற் காலத்தில் கூட பெண்கட்கு இந்த உரிமை மறுக்கப்படுகின்றது.

பையன் செகப்பா, கருப்பா, படித்தவனா என்பதெல்லாம் பெண்கள் தெரிந்து கொள்ள முடிவதில்லை. இவைகளை யெல்லாம் அறிந்து கொள்ள வேண்டும், கணவனாக வாப்போகிறவனின் முகத்தைப் பார்க்க வேண்டுமென்கிற ஆவல் எல்லா பெண்களுக் குமே உண்டு. யாரிடம் கேட்பது? இயற்கையாகவே பெண் கட்கு வெட்கம். யாரிடமாவது துணிந்து கேட்டுவிட்டாலோ 'ஐயையோ! இந்தப் பெண் என்ன இப்படிக் கேட்கிறது? அதி சயமான குட்டியாயிருக்காளே! நாங்களெல்லாம் இப்படி கேக் கல்லடி அம்மா!" என்று துணிந்து கேட்டுவிட்ட பெண்ணை, கண்

காட்சிசாலையில் வைக்கத் தகுந்த பொருளாக மதித்து விடுகின்றனர். நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பெண்கள் மண மேடையில் தான் கடைக்கண்ணால் தங்கள் கணவனைக் கவனிக்கிறார்கள். தாய் தந்தையர்களால் அறியாமல் ஆற்றப்படும் பெருந் தவறு இது; அக்ரமம் கூட.

தன் வாழ்நாள் முழுமையும், சுக துக்கங்களில் தன்னுடன் இருக்க வேண்டியவனை, அப்படிப்பட்ட ஒப்பந்தமொன்றில் ஈடுபடு முன்னர் பார்க்க வேண்டுமென்கிற பிரியம் யாருக்குத்தான் இருக்காது? வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம், தேவையில்லாவிட்டால் தூக்கி எறிந்து விடலாம். அப்படிப்பட்ட சாமான்களைக்கூட கண்ணால் பார்க்காமல் வாங்கிக் கொள்வதாக உறுதி சொல்ல மனம் வருகிறதா?

பையனுக்குப் பெண் தேடப் போகும் தாயார், பெண் நன்றாக வீட்டு வேலைகளைச் செய்யக்கூடியவளா, தனக்கு அடங்கி ஒடுங்கி நடக்கக்கூடிய மருமகளுக்கு இவள் லாயக்குதானா என்பதைப் பார்த்துத் திருப்தியடைகிறாள். தகப்பனார் பெண் குடும்பம் "சுமாரானது" தானா என்பதைமட்டும் பார்த்துச் சந்தோஷிக்கிறார். பையன் ஒருவன் இருக்கின்றானே, அவனுடைய தேவையென்ன? இதைப் பற்றிய சிந்தனையே அவர்களுக்குக் கிடையாது. தாய் தந்தையர் திரும்பி வந்ததும் பையன், தாயாரிடம் வந்து "எம்மா பெண் நல்ல அழகுதானேம்மா?" என்று ஆவலோடு கேட்கின்றான். ஐயோ பாவம் அந்தக் கேள்வியில்தான் எவ்வளவு பொருள்-எவ்வளவு வேட்கை மலிந்து கிடக்கின்றன? தாயார் "பொண் சுமாரான அழகு. நன்னா வீட்டு வேலை பார்க்கத் தெரியும். மெழுக எடுக்கக் கொடுக்கத் தெரியும். நாலு பேருக்கு சமைக்க................"

பையன் கேட்ட கேள்விக்கு அழகான பதிலல்லவா இது. இப்பொழுதுதான் பையனுக்கு ஆவல் அதிகப்படுகிறது.

"எம்மா பொண் படிச்சிருக்காளோல்லியோ?"

"படிச்சிருக்கா ஏதோ சுமாரா. வீட்டுக்கு வரப் பொம்மண்டாட்டிக்குப் படிப்பு எதுக்கடா? மொத்தத்திலே சுமாரான குடும்பம், நல்ல மனுஷா."

இப்படி தாயார் அவளுடைய திருப்திக் கேற்றவாறு பேசிக் கொண்டே போவாள். பையன் பேசாமல் கம்பி நீட்ட வேண்டியதுதான் அடுத்த அறைக்கு. பெண்ணைப் பற்றிய கேள்வியைத் தாயாரிடம்தான் கேட்கலாம். தகப்பனாரிடம் கேட்டு விட்டாலோ அது பெரிய பெரிய மிகப்பெரிய தவறுதலாம்.

ஒரு பெண்ணுக்கு, கணவனாக வரப் போகிறவனைப் பற்றித் தெரிந்துகொள்வதில் முழு உரிமை நல்க வேண்டியது மிக அவசியமாகும். ஒரு ஆடவன் கலியாணம் செய்து கொள்கிறான்; பெண் பிடிக்கவில்லை யென்றால் தள்ளி வைக்கிறான்; பணக்காரனாகயிருந்தால் வேறு கல்யாணம் செய்து கொள்கிறான்; இன்னும் செய்யக் கூடாத அக்ரமங்களை யெல்லாம் செய்கிறான்; கொஞ்சம் மிஞ்சினால் ஜீவனாம்சம்தானே என்ன பிரமாதம் என்கிறான். இன்றைக்கு இருக்கும் சட்டதிட்டங்களின்படி பெண் இவைகளை யெல்லாம் பொறுத்துக்கொண்டுதா னிருக்கவேண்டும். சட்டப்படி பெண்ணுடன் அக்கணவன் இருக்கத்தான் வேண்டுமென்றாலும், அந்த ரசனையற்ற வாழ்க்கையில் யாருக்குத்தான் விருப்பு இருக்க முடியும்? விவாக ரத்து வேண்ட பெண்ணுக் குரிமையுண்டா? இல்லை. கொஞ்சம் தகராறு அதிகப்படும் போலிருந்தால் வேண்டாத பெண்டாட்டி-அந்த அபலையின் மீது அபாண்டத்தைச் சுமத்தி விலக்கிவிடக்கூட கல் மனம் படைத்த ஆடவன் தயாராயிருப்பான். பெண் 'பேதை' யல்லவா! எந்தக் கஷ்டம் வந்தாலும் இவள் தலையில்தான்.

எதிர்கால விபத்துக்களை யெல்லாம் அனுபவிக்க வேண்டிய-அனுபவிக்கக் கட்டாயப் படுத்தப்படுகிற பெண், கணவனாக வரப் போகிறவனைப்பற்றி முதலிலேயே அறிந்து கொள்தல் பாபமா? பிரளயம் வந்து விடுமா? எங்கோ ஓரிரண்டிடங்களில் இருவர்களின் சம்மதத்தின் மீதே திருமணம் ஆற்றப்படுகிறதே அங்கெல்லாம் பூகம்பமோ பிரளயமோ வந்ததாகத் தெரியவில்லையே.

ஆணுக்கும் முக்கியமாகப் பெண்ணுக்கும் தங்கள் கணவாகவும் மனைவியாகவும் வரப்போகிற ஆணையும் பெண்ணையும் பற்றி முதலில் அறிந்து கொள்வதற்குச் சுதந்தரம் நல்க வேண்டும். ஒருவரை யொருவர் நேரடியாகப் பார்த்து-நன்றாயறிந்து திருப்தி

கொள்ளுதல் நல்லது. அப்பொழுது ஊன்றப்படுகின்ற திருப்தி விதை பிற்காலத்தில் நல்ல மரமாக வளர்ந்து ஆக்கமளிக்கும்; வாழ்க்கையை பரிமளிக்கச்செய்யும். முன் பின் அறியாது இருவர் ஆணும்-பெண்ணும் சந்திக்கும் பொழுது, பெண்ணின் மனம் எவ்வளவு பயத்தில் தத்தளிக்கிறது. தனது கணவனைப் பற்றி அவள் எவ்வாறு எண்ணுகிருள் என்பதை அனுபவித்தோரே உணர்தல் முடியும். சிறிது திருப்தியோடு செய்யப்படும் காரியம் முழுத் திருப்தியாக முடியும். பயத்தோடு செய்யப்படும் காரியம் ஊனமின்றி நடைபெறுவது அபூர்வமே.

ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் நன்கறிந்து காதற் கலியாணமாக செய்து கொள்தல் நல்லது. தாய் தந்தையர் 'அவ்வளவு தூரம்' (இது தாய் தந்தையர் பாஷை) செல்லப் பிரியப் படாவிட்டால், ஒருவரை யொருவர் அறிந்துகொள்ள. தாய் தந்தையர் இடையிலே நின்று வேலை செய்தல் வேண்டும். இரு பாலாருக்கும்-நன்கு விளக்கிச் சொல்லி-திருப்தியைக் கேட்டு, பின்னர் விவாகம் செய்விப்பதே சிறந்தது. ஆயுள் பரியந்தம் வாழ்வி லும் தாழ்விலும் ஒன்றுபட வேண்டிய இரு ஆத்மாக்களின் அபிப்பிராயத்தை வினவுதல் தவறல்ல. சிறிது யோசித்துப் பார்த் தால் இது எவ்வளவு அவசிய மென்பதை உணரலாம். புத்திரனுல் அல்லது புத்திரியால் சொல்லப்படும் பழிச் சொற்களுக் காளாகாம லிருக்கவாவது தாய் தந்தையர் இம் முறையைக் கையாளுதல் அவசியம்.

"நீயாகப் பார்த்துத் தானே கொண்டுவந்தாய், அவளை நீயே கட்டிக்கொண்டு அழு." என்று சொல்லிவிட்டு பையன் மிடுக்காக வெளியே செல்லமாட்டானல்லவா? பெண் கண் கலங்கி "தாயா கிய நீயே இப்படிப்பட்ட கணவனைப் பார்த்து எனக்குக் கட்டி வைத்தாயே" என்று சொல்லி அழும்போது "அது உன் தலைவிதி யம்மா" என்று சொல்லி நாமும் கூடச் சேர்ந்து அழுவதில் என்ன பிரயோஜனம்? கொஞ்சம் முன் யோசனை, அவசியமான காரியத்திலே தாராள புத்தி, ஏகபோக உரிமையில் அவர்களுக்கும் சிறிது சுதந்தரம், இவைகள் அவசியம். யோசிப்பார்களாக!

# என் மாதாவின் மலரடிகட்கு

(தென்னுப்பிரிகா—டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள் எழுதியது)

மாதா! நான் தங்களுக்குச் செலுத்தக்கூடிய காணிக்கை என்ன? தங்களுக்கு அர்ப்பணம் செய்யக்கூடிய பொருள் என்னிடம் என்ன இருக்கிறது? நானே ஏழை—வறுமையால் வாட்டப்பட்ட பரம ஏழை. நான் உனக்குக் கொடுக்கக் கூடியது ஒன்று மட்டும் என்னிடத்தில் எப்பொழுதும் இருக்கிறது. அது தான் "அன்பு" என்ற மலர். அதை உனது பொற்றாமரைக் கழல்களில் என்றும் சமர்ப்பித்து வருகிறேன். என்மாதாவே! உன்னை நான் நேசிக்கிறேன்; போற்றுகிறேன்; உன்னை என்னுள்ளத்தில் வைத்து வணங்குகிறேன்; தங்கள் பாத மலர்களில் விழுந்து விழுந்து நமஸ்கரிக்கிறேன். அன்பு, எனது இருதயத்திலிருந்து எழும்பும் உண்மை உணர்ச்சியே. எனது அன்பின் உண்மையை நீயே அறிவாய். அப்படியானுல், எனது தூய அன்பை ஏற்றுக்கொள்ள நீ ஒருக்காலும் மறுக்கமாட்டா யென்பது நிச்சயம்.

என்னருமை அன்னையே! உன்னை நான் நேசிக்கிறேன் என்று கூறுவது எனது அறியாமையா யிருக்கலாம். "அன்பு" என்பது உலகத்தில் இப்பொழுது ஒவ்வொரு வரும் சொல்லும் சர்வ சாதாரண வார்த்தையாகி விட்டது. "அன்பு" என்ற அபார வாக்கியத்தின் உண்மை அர்த்தம் அழிந்து போய்விட்டது. மானிடர்கள் தாங்கள் விரும்புபவைகளை யெல்லாம் "அன்பு" செலுத்துவதாகச் சொல்லுகிருர்கள். அவர்கள் புத்தகங்களை விரும்புகிருர்கள், படங்களையும் புஷ்பங்களையும் நேசிக்கிருர்கள்; இனிப்புத்தின் பண்டங்களின் மீது பிரியம் செலுத்தியே குழந்தைகள் அவைகளைத் தின்ன விரும்புகின்றன. சிறுவர், சிறுமிகளை நேசிக்கின்ருர்கள்; சிறுமிகளோ, சிறுவர்களை நேசிக்கின்ருர்கள்; காதலிகளும் அவரவர் காதலர்களை நேசிக்கின்ருர்கள்; காதலர்களும் அவ்வாறே அவரவர் காதலிகளை நேசிக்கின்ருர்கள்; அரசியல் வாதிகளோ அதிகாரத்தையும் அந்தஸ்தையும் நேசிக்கிருர்கள். அன்பின் மகத்துவம் இவ்வாறு சின்னு பின்னப்பட்டு, நிலை தவறி

இடத்துக்குத் தக்கவாறு மாறுபட்டு விட்டது. ஆனால் உன்மீது என்பாலுள்ள அன்பை இவற்றுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது சரியா? என் தாயே! உன்னை நேசிக்கிறேன்—உன்னை எனது கடவுளைக் காட்டிலும் மிக மிக அதிகமாகவே நேசிக்கிறேன். கடவுள்களுக் கெல்லாம் மாதாவாக விளங்கும் என் தேவதைத் தாயிடம் கடவுளைக்காட்டிலும் அதிக அன்புசெலுத்த வேண்டியது என்றன் கடமையல்லவா?

எள் தாயைக் காட்டிலும் உலக இயற்கையில் வனப்புவாய்ந்வர் எவர்? அன்னையே! உன்றன் சௌந்தர்யம் என்ன? உன்றன் ஜோதி என்ன! ஓர் ஸ்வர்ணப் பதுமை போன்றிருக்கும் ஓர் அன்னையின் அழகிலும் அதிக லாவண்யமாய் ஜ்வலிக்கும் நின் தாய்மை அழகில் லிகிக்காதிருக்க முடியுமோ? பெண், தாய்மைச் சக்தியை அடையும் பொழுது அவளுடைய பெருமையும் சக்தியும் அபாரமாகி விடுகிறது. உன்னை அன்னையாகப் பெற்ற என்றன் அதிருஷ்டமே அதிருஷ்டம். இதைக் காட்டிலும் பெருமை தரக்கூடியது எனக்கு ஏதேனு முண்டா? மாதர்களே தேவதைகள். உலக இயற்கை அழகை, வென்று விளங்கும் மாதர்களை—தாய்மாரைத் தேவதைகளென்றோ தெய்வங்களென்றோ கூறுவதில் குற்றமில்லை. பெண் தெய்வங்களைப் பெற்றெடுத்த பராசக்தியாகிய நீயே எனது அன்னையிலும் அதிக அருமையான அன்னை. உன்னை என்றன் அருந்தலத் தாயென்றே சொல்கிறேன்.

தாயே! யர்வரினும் உன்னையே உயர்வாக உன்னி உன்னி உன்னிடம் அன்பு செலுத்திக் கொண்டிருப்பது சிலருக்குப் பிரியமில்லை. நின்னை உன்னதமாகப் பேசுவதைப் பாவமாகக் கருதுகிறார்கள். நின் மேன்மையைக் கருதுவதைக் குறைச்சலாக எண்ணுகிறார்கள். ஏனென்றால், அப்படி அன்பு செலுத்துவது அயல் நாடுகளின் மீது பகைமையையும் துவேஷத்தையும் உண்டாக்குகிறதாம். அவர்கள் அப்படிச் சொல்வது அறியாமையே. அவர்கள் எண்ணம் தவறு என்பதற்குச் சற்றும் சந்தேகமே யில்லை. நீ என் தாய்; உன்பால் அன்பால் மனிதர் எல்லோரும் ஐக்கியமாகி விட்டார்கள். உன்மீது அன்பு பூண்டிருக்கும் நானா, மானிடர்களுக்குத் தொண்டு செய்ய மறுப்பேன்? நான் எவ்வாறு தொண்டு

செய்யாதிருக்க முடியும்? உனக்குத் தொண்டு செய்வதே எனது முதற் கடமையாகும், உனக்குப் பிறகே மற்ற உலகமக்களுக்குச் செய்யவேண்டியது இரண்டாவது கடமையாகும். என் தாயிடம் உலகத்தைக் காண்கிறேன். அகிலமும் அதன் மக்களும் எனது தாயின் விசால இருதய கமலத்தில் இடம் பெற்றிருக்கிறார்கள். எல்லா மானிடர்களும் என்றன் தாயின் புதல்வர்களே. ஆகையால் அவர்கள் அனைவரும் என்றன் உற்றாரே, உறவினரே, சகோதரரேயாவர்.

என் தாயின் மக்களில் பெயர்பெற்று விளங்கிய அருமைப் புதல்வர்கள் உலக மாந்தர்களுக்கு நீதி போதிக்கவில்லையா? மானிட குலத்திற்காகவே தோன்றி, மனித சமூகத்திற்காகவே வாழ்ந்து, மனுஷிய வகுப்பைப்பற்றியே சிந்தித்துச் சிந்தித்து, மனித விமோசனத்திற்காகவே அவர்கள் உயிரையும் விடவில்லையா? அவர்கள் நிறபேதத்தை எண்ணினார்களா? அவர்களிடம் சாதி பேதம் உண்டா? அவர்கள் மத வித்தியாசத்தைக் கருதினார்களா? தாயே! நிர்மலமான மானிட வாழ்விற்கும் மானிட தர்மத்திற்கும் நீயே இருப்பிடமாய் இருக்கின்றாய். விஸ்வ பிரேமையெனும் வையமளாவிய அன்பின் வடிவமாகவே நீ இருக்கிறாய். உலகத்திற்குச் சத்தியத்தை—அன்பை உபதேசிக்கும் ஆற்றல் உன்னிடமே அமைந்திருக்கிறது. மாதாவாகிய உன்மீது நான் அன்பு செலுத்துவதால், உலகத்தையும் உலகத்திலுள்ள உயிர்களையும் நான் கட்டாயம் நேசிக்க வேண்டும் என்று கூறுவது தப்பிதமாகுமோ? என்று உன்னைக் கேட்கிறேன்.

அம்மா! உன்னை மட்டுமல்ல உன் மக்களைமாத்திரமல்ல, உன்னில் அடங்கியிருக்கும் ஒவ்வொரு அணுவையுங்கூட நேசிக்கிறேன். உன்றன் தொடர்புடைய ஒவ்வொன்றையும் நான் நேசிக்கிறேன். உன்னிடத்திலுள்ள அனைத்தும் எனக்குப் பிரியத்திலும் பிரியமே. என் தாயிடத்துள்ள ஒவ்வொரு அணுவும் எனக்கு மலையயாகும். எனது அன்னையின் அற்புதச் சௌந்தர்யத்தைக் காட்டிலும்—மேலான பொலிவைக் காட்டிலும் உலகில் வேறென்ன இருக்கிறது? என் மாதாவின் முகத் தழகும், கரத் தழகும் செந்தாமரைக் கழல் அழகும் இவ்வுலகின் எத்திசையில்

காணமுடியும்? என் தாய்பெற்றெடுத்த மக்கள் அனைவரையும் நேசிக்கிறேன். அவர்கள் அனைவரும் என்றன் சகோதரர்களே!

இன்று என் சகோதரர்கள் ஒற்றுமையற்று இருக்கிறார்களென்றும், அவர்களுக்குள் அன்பு இல்லை என்றும் சொல்லுகிறார்கள். இவர்கள் இப்படிச் சொல்வது எனக்குக் கர்ண கடூரமாயிருக்கிறது. என் சகோதரர்கள்மீது மட்டற்ற கோபம் பொங்கி எழும்புகிறது. ஆனால் அடுத்த நிஷத்தில் என்றன் உள்ளம் துடி துடித்து, என் சகோதரர்களின் அறியாமைக்கும், என் தாய்மீது அவர்கள் அன்பு செலுத்தாது கவலையற்று அலைவதற்கும் வருத்தப்படுகிறேன்.

என் அன்னையின் புதல்வர்களை எனது சகோதரர்களை நான் எவ்வாறு நேசிக்காதிருக்க முடியும்? என் இருதயத்தில் நரம்புகளின் வழியா யோடுகின்ற இரத்தமே என் சகோதரர்கள். இருதயத்திலும் நரம்புகளின் வழியாய் ஓடுகின்றது. என்னைப் பெற்றெடுத்த அம்மையே, என் சகோதரர்களையும் பெற்றாள். நான் ஜனித்த இரத்தத்தில்தான் என் சகோதரர்களும் உதித்தார்கள். அப்படிப்பட்ட சகோதரர்களை நான் எவ்வாறு பகைக்கமுடியும்? அவர்களின்மீது துவேஷம் எனக்கு ஏற்படுமா? ஒருக்காலும் முடியவே முடியாது. அவர்களைக் கேவலமாகவும எண்ணேன்; அவர்களை ஏமாற்றவும் மாட்டேன்; அவர்களைக் கைவிடவும் மாட்டேன். என்னிடமுள்ள அறிவு, ஆற்றல், அனைத்தும் என் சகோதரர்களுக்கே அர்ப்பணம் செய்துவிட்டேன். அவர்களுக்குத் தொண்டு செய்வதே என் கடமை--என் கடன்.

மாதா! உனது மலரடிகட்கு! அன்பும் அருளும் வடிவான அன்னாய்! செந்தாமரை கழல்கட்குச் செலுத்தும் காணிக்கை இதுவே. அடியேனது இச்சிறு அர்ப்பணத்தை ஏற்றுக்கொள்க!

# என் மணம்

(சு. நாராயணன்)

அநேகமாக உலகிற் றோன்றிய மானுடர் யாரும் சுகமாகக் காலங் கழிக்கும் வகையையே உன்னுகின்றனர். துன்ப நிலையில் தன்னைவிடத் துரதிர்ஷ்டம் படைத்தோர் வேறொருவரிலர் என எண்ணுகின்றனர். காலச் சக்கரம் சுழலச் சுழல அவர் தம் துக்க நினைவுகள் காற்றிற் பட்ட பஞ்செனப் பறந்து விடுகின்றன. சமீபத்தில் காலமான நமது நண்பரின் உருவம் சின்னாள் நம் மனக் கண்ணில் படுகின்றது. வருடம் கடந்தபின் இறந்தோரைப்பற்றிய எண்ணம் வருவதே இல்லை. என்னே உலக மாய்கை!

இம்முறையேதான் கணவனைப் பிரிந்த சகோதரிகளிடத்திலும். அவர் தன் கணவனோடு நற் காதற் குடும்பம் நடத்தியிருக்கலாம். கணவன் இறப்பின் பின்னர் வேறெவரையும் கருதாது இருக்கலாம். ஆனால் நாட் பல கழிந்த பின்பு, மேலே ஆரம்பத்தில் கண்டுள்ளவாறு சென்றதை மறந்து அக்காரிகை வைதவ்யத்தினால் துடிக்கின்றார். தன் வாலிபம் வீணாய்ச் செல்லும் போது இன்புற்று வாழும் சகோதரிகளைப் பார்த்துப் பொறுமுகின்றார். உலக வியற்கைதானே!

அன்று நான், பேசும் படக்காட்சிசாலைக்குச் சென்றுகொண்டிருந்தேன். இன்பமே உருக் கொண்டது போன்ற அவ்வந்தி நேரத்தில் பல இளந்தம்பதிகள் கேளிக்கைப் பேசிச்சென்றுகொண்டிருந்தனர். நானும் முணகிக் கொண்டே நடந்து சென்றேன். என் பார்வை ஒரு வனிதையின் மீது விழுந்தது. நாகரிகமுள்ள கட்டழகி; கையில் சிங்காரக் குடை. என்னுடைய உத்திரவையும் மீறி என் கண்கள் அவளை உற்று நோக்கி விட்டன. அம்மங்கையும் என்னைத் திரும்பிப் பார்த்து என்மீது ஒருதடவை குறுநகை புரிந்துவிட்டு தன் வழியே நடந்தாள். அம்மா! என்னுடம்பே ஒருதடவை ஆனந்தத்தால் குலுங்கிவிட்டது; அவ்வளவு உணர்ச்சி எனக்கு.

அன்று காட்சியின் மீதா என் மனது ஓடிற்று என்கிறீர்கள்? அக்கட்டழகிதான் என் மனதைப் பீடமாக்கிக் கொண்டாளே. காட்சி முடிந்து நான் வெளியேறியவுடன் என் நண்பன் கிட்டு வைச் சந்திக்கும்படி நேர்ந்தது. அந் நங்கை ஓர் கைம்பெண் என்றும், எங்களூர் பெண்பாடசாலையினில் உபாத்தியாயினி என்றும், பெயர் கமலாவதி என்றும் கிட்டுவிடம் இருந்து அறிந் தேன். வீட்டிற்குச் சென்று படுக்கையிற் கிடந்தேன்.

ஃ ஃ ஃ

மாலை நேரம்! 'நேரு பார்க்'கில் அநேகம்பேர் உல்லாசமாக விருந்தனர். அந்தப் 'பார்க்'கின் அருகிலிருந்த கல்லூரியில் கமல வதி கல்வி பயின்று வந்தாள். 'பார்க்'கில் அமைத்திருந்த 'ரேடியோ' வினில் இருந்து வந்த இனிய சங்கீதத்தை ரஸிகர் அநேகர் அநுப வித்தனர். பலர் வம்புப் பேச்சில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் கிருஷ்ணமூர்த்தியின் கவனம் வேறுபக்கத்தில் இருந்தது. அப்பக் கத்தில் கல்லூரி மாணவிகள் பலர் பொழுது போக்கினர். அவர்க ளில் நடு நாயகமாய் விளங்கிய கமலவதியின் மீதுதான் கிருஷ்ண மூர்த்தியின் கவனம் சென்றது. கமலவதியோ இயற்கை யழகு மிகுந்தவள். அவளைக் கண்டபொழுதில் அவனுக்கோர் புத் துணர்ச்சி வந்தது. கமலாவுக்கும் அப்படித்தானிருந்திருக்க வேண் டும். நாள் தவறினும் காதலர் சந்திக்கத் தவறியதில்லை. பின் கேட் பானேன். பெற்றோர் சம்மதியின்மீது அவர்களிடை மணம் நடந் தேறியது. தம்பதிகள் மிடுக்காக வாழ்க்கை யின்பம் நடாத்தினர்! அந்தோ இவர்கள் நேசம் கடவுளுக்குப் பொறுக்கவில்லை போலும். அதி சீக்கிரத்தில் கடவுள் கிருஷ்ணமூர்த்தியை அழைத்துவிட் டார். கலங்கி துடித்து நின்ற காதலியிடம் அவன் நவின்ற கடை சிச் சொற்கள்: "கமலம்! என் முடிவு கிட்டிவிட்டது. என்னை அன் புடன் பதியாக நீ எண்ணி இருந்தால் நான் இறந்த பின்பு அழ கைக் குலைக்காதே. மறுமணம் செய்துகொள். இதுவே என் வேண்டுகோள்" இதைக்கேட்ட கமலவதிக்கு காதில் நாராசம் பாய்ச்சினது போலிருந்தது. அவள் உள்ளம் துடித்துக் கதறினள், அழுதாள், என்செய்வது?

ஃ ஃ ஃ

மறுநாட் காலை துயில் நீங்தேன். அப்பொழுதும் என்னால் அவளை மறக்கமுடியவில்லை. நானே துணிவுடன் கமலவதியின் ஜாகை சென்று என்னை அறிமுகப் படுத்திக்கொண்டேன். நான் புன்னகை தவழும் முகத்துடன் வரவேற்கப் பட்டேன். எங்களிருவரிடை நடந்த சம்பாஷணையிலிருந்துதான் நான் இடையில் சொல்லியபடி கமலவதி-கிருஷ்ணமூர்த்தி தாம்பத்ய வாழ்வைப் பற்றித் தெரிந்துகொண்டேன். எங்கள் மனம் ஒருமைப்பட்டது. நாங்கள் சமூகத்தைப் பொருட்படுத்த வில்லை. எங்கள் விவாகம் நடந்தேறியது.

நாங்கள் இப்பொழுது இனிய வாழ்க்கை நடத்துகின்றோம். "கமலா, நாம் இருவரும் மணந்து கொண்டுவிட்டோம். இனி கிருஷ்ணமூர்த்தியின் ஆத்மா சாந்தியடையு மல்லவா" என்றேன். அப்பொழுதுதான் என் கண்மணி கமலத்தின் அழகிய கண்களிலிருந்து இரு நீர்த் திவலைகள் மிருதுவான கன்னத்திலே பாய்ந்து ஓடின.

"விதவைத் துயர் ஒழிக"

---

# ஆணும்—பெண்ணும்

அழிக்கமுடியாத கலைஞனை கடவுள் எப்பொழுது ஆடவனை சிருஷ்டிக்கத் தலைப்பட்டாரோ அப்பொழுதே சூரியனும் மிகுந்த ஒளியோடும் பிரகாசத்தோடும் ஆகாயத்தில் தோன்றத் தலைப்பட்டான். உலகத்தை வெப்பத்தால் தகிக்கும் சூரியனுடைய சுபாவங்கள், அந்த ஆண்மகனையும் சும்மா விட்டுவிடவில்லை. அவனையும் போய் இந்த வெப்பம் தாக்க ஆரம்பித்து படிப்படியாக ஆண்மகனும் வெப்ப மயமாக மாறி, உலகத்தையே தன்னலமென்ற வெப்பத்தால் தகிக்க ஆரம்பித்துவிட்டான். எவ்வளவோ காலங்கள் கடந்துவிட்டபோதிலும், ஆண்மகனிடத்தில், இந்த "தன்னலம்" மட்டும் அழிந்துபோகாமல் தொடர்பாய் இருந்து கொண்டுவருகிறது.

இவ்விதத் தன்னலம் நிறைந்த, கொடிய சுற்றுச் சார்பின் மத்தியில் பெண்மகள் தோன்றினாள். எப்பொழுது கடவுள் தன்

னுடைய சாதனங்களைக் கொண்டு சிருஷ்டித் தொழிலைப் பூர்த்தி செய்வதற்காக உலகமாகிய மண்டபத்தில் இருக்கத் தலைப்பட்டாரோ; அப்பொழுது பிரகிருதி தேவியின் உள்ளம் சேர்க்கைப் பிரிவு என்னும் உணர்ச்சிகளை தெளிவாக விளக்கிக் காட்டிற்று. சூரியன் மேற்றிசை சென்று தன்னுடைய கடைசி கதிர்களைமட்டும் பரப்பிக்கொண்டிருந்தான். அவனுடைய வெப்பத்தின் சாயல் மட்டும் இயற்கை யெங்கும் பரவியிருந்தது. மற்றொருபுறத்தில் பூரணைச் சந்திரன் தன்னுடைய குளிர்ந்த கதிர்களை யெங்கும் பரப்பிக்கொண்டிருந்தான், அந்த ஒப்புயர்வற்ற கலைஞன்—கடவுள்—யாவரும் கண்டு மோகிக்கத் தக்கதொரு மூர்த்தியை சிருஷ்டி செய்தார். அப்பொழுது அதனில் ஒரு அற்புதமான வேற்றுமை யிருந்தது. உலகமே வியக்கும் இந்த உருவத்தினிடம் சூரியனைப் போன்ற பிரகாசமும் சந்திரனைப் போன்ற தன்மையும் படிந்திருந்தன. இதனுடைய தோற்றம் புயலும் மழையும் கலந்திருப்பது போல் விளங்கிற்று. காதலும் ரோஷமும், க்ஷமையும், உறுதியும், சக்தியும், அழகும், ஆற்றலும் அழிவும், யாவும் இந்த மகிமை பொருந்திய தேவி யிடத்தில் குடிகொண்டிருந்தன. இந்த ஒப்புயர்வற்ற தேவியைத் தான்உலகினர் 'பெண் மகள்' என்ற பெயரிட்டு அழைக்கின்றனர். இன்னும் பெண் மகளிடத்தில் இந்த வேற்றுமைப்பட்ட குணங்கள் கலந்திருப்பதை நாம் காண்கிறோம்.

ஞானம் கலந்த பார்வையோடு, பெண்மகளைப் பார்க்கும் போது, இயற்கையாகவே ஆண்மகனுடைய வாயிலிருந்து 'அம்மா' என்ற சொல் உதித்தது. அப்பொழுதிருந்தே பாரததேச மக்கள் பெண்மகளை ஜகத் ஜனனி என்று பெயரிட்டு அழைத்ததோ டில்லாமல், போற்றியும் புகழ்ந்தும் பூசித்தும் வந்தனர். காதல், அன்பு, வாத்சல்யம், கருணை முதலிய குணங்களை பொழிந்து பெண் மகள் ஆண் மகனுடைய உள்ளத்தை செழிப்புடையதாக ஆக்கிவிட்டாள். கடின சித்தமுடைய ஆண்மகனும், பெண் மகளுடைய தொடர்பினால், மென்மையாய் நடந்துகொள்ள தெரிந்துகொண்டான். தன்னுடைய கருணை ததும்பும் கண்களினாலே, பெண் மகள், ஆண் மகனுக்கு காதல், தயை என்னும் குணங்களைக் கற்றுக் கொடுத்தாள். இதுமட்டுமல்ல.

லோப குணமுள்ள ஆடவனுக்கு, அறிவு என்பதைக் காட்டி, சொர்க்க சுகத்தை அநுபவிக்கும்படி செய்தாள். பெண்ணினுடைய உயர்வு தாய்மையிலிருக்கிறது. தாய்மைக்கு முன்பு எல்லாம் தலைகுனிந்து வணங்கவேண்டியதாயிற்று.

பெண்ணை வாத்சல்யத்தின் மூர்த்தியென்றும், கருணையின் அவதாரமென்றும் சொல்லவேண்டும். அவள்தான் உலகத்தைச் சிருஷ்டிக்கிறாள். காப்பாற்றவும் செய்கிறாள். அன்பின் வசத்தினால் கட்டுப்பட்டு பெண், பூமாதேவியைப் போல் தன்னுடைய மக்களை சுமக்கிறாள். இவ்வித வாத்சல்யத்தால் கருணையும், கருணையால் கவிதையும் உலகத்தில் உற்பத்தியாயிற்று. சரஸ்வதியின் அவதாரம் கொண்டு, பெண் மகள் உலகத்தில் கவிதைகளைப் பொழிந்தாள். ஆடவனுடைய உள்ளத்தில் முயற்சி என்ற உணர்ச்சியைத் தூண்டிவிட்டாள்.

இந்த சந்தர்ப்பத்தில் ஆடவன் தன் நிலைமைபற்றி சிறிது ஆலோசிக்கலானான். தன்னுடைய சக்தியைப்பற்றியும் தெரிந்து கொள்ள யத்தனித்தான். அப்பொழுது அவனுக்கு தன்னிடமுள்ள சக்தியும் பெருமையும் பெண்மகளிடமே இருந்து வருகின்றன வென்பது அவனுக்குப் புலப்பட்டது. பெண் மகளிடத்திலிருக்கும் சக்திதான் ஆண் மகனிடம் ஊடுருவி பாய்ந்திருப்பதைக் கண்டான். இப்படிப்பட்ட ஆண் உடலில் தனக்குச் சொந்தமான பொருள் யாதுளது? அவனிடத்திலிருப்பது பெரிதாயிருந்த போதிலும், பாலை வனத்தைப் போல் பிரயோசனமற்றதாயிருக்கிறது. மலையைப்போல் உயரமானதாயிருந்த போதிலும், கற்களைப்போல் கடினமாயிருக்கிறது. கிணற்றைப்போல் ஆழமுடையதாயிருந்த போதிலும், லோப குணமுடையதாயிருக்கிறது. ஆனால் பெண் மகள் பாலைவனத்தைப் பசுமையும் செழிப்பும் கலந்ததாய்ச் செய்துவிட்டாள். தன்னுடைய ஒளியினால் இருளை ஒட்டிவிட்டாள். இதனால்தான் பெண்களைச் "சக்தி" என்று பெயரிட்டு அழைக்கின்றனர். அவளைப் பூசித்து வந்திருக்கின்றனர். ஆடவன் சோர்வுற்றபொழுது பெண் மகள் அவனை உற்சாகப்படுத்தினாள். அவன் மனம் சஞ்சலப்பட்ட பொழுது அவள் உறுதியுடனின்று தன்னுடைய காரியங்களைச் செவ்

வனே செய்துவந்தாள். போரில் புறமுது கிட்டு ஓடும்பொழுது, ரணசண்டிகையாய் நின்று போர் செய்யத் துவங்கினாள். இவ்வளவு பெருமிதம் வாய்ந்த பெண்களின் பெருமையை அபலையான ஆடவனால் எவ்வாறு அளவிட்டுச் சொல்லமுடியும்? அறிந்து கொள்ளமுடியாத காரணத்தால்தான், ஆண் மகன் அறிவீனத்தால் பெண் மகளை "அபலை" என்று பெயரிட்டு அழைக்கிறான்.

ஆண்மை, பெண்மை இவைகளின் வேற்றுமைகளைக் காட்டுவதற்கு நமது நாகரிகத்தில் ஏராளமான உதாரணங்கள் நமக்குக் கிடைக்கின்றன. நாம் பிரம்மாவை ஆக்கும் சக்தியென்றும் இதனை அழிக்கும் சக்தியென்றும் விஷ்ணுவைக் காக்கும் சக்தியென்றும் சொல்லிவருகிறோம். இராமனை, கடமைகளை சரிவரச் செய்வதற்காகப் பிறந்த மஹா புருஷன் என்கிறோம். கிருஷ்ணனிடத்தில் ஆடவர்களுக்கு வேண்டிய சகல அம்சங்களும் பரிபூரணமாக இருந்தது என்று பெருமை பாராட்டிக்கொள்கிறோம். நாம் இன்னொரு புறத்தில் சரஸ்வதியை, அறிவின் அவதாரமாய் எண்ணிப் போற்றுகிறோம். இந்த அறிவுத் தெய்வத்தின் உதவியில்லாவிட்டால் புருஷன் ஊமையாய்ப் போய்விடுகிறான். அவள் திவ்யமான ஒளியுடையவள். அது கிடைக்காவிட்டால் புருஷன் குருடனாய்ப் போய் விடுகிறான். லக்ஷ்மியை நாம் ஐசுவரியத்தின் தோற்றம் என்று சொல்லுகிறோம். அவளுடைய அருளில்லாவிட்டால், புருஷன் பரம ஏழையாய்ப் போய்விடுகிறான். பார்வதியை நாம் "சக்தி" என்று சொல்லிப்போற்றி வணங்குகிறோம். அவளுடைய அருள் இல்லாவிட்டால், ஆண் மகன் பலஹீனனாய்ப் போய்விடுகிறான். சீதை பூமியைப்போல் பொறுமையுடையவள். ராதை காதல் என்பதே உருவாய் வந்தவள். ஆதி காலத்தில் வாழ்ந்த ரோமானியர்களும் கிரேக்கர்களும் பெண் மக்களை, காதல், கல்வி, அழகு ஆகியவற்றின் பொக்கிஷமென்று சொல்லிப்போற்றி வந்திருக்கிறார்கள். ஆகையால் ஆடவனுடைய வாழ்க்கை பெண்ணினுடைய ஆதீனத்தின் கீழிலிருக்கின்றது.

உண்மையில் உலக வாழ்க்கையை புருஷனால் மட்டும் தனிப்பட்டு நடத்த முடியாதென்பதை உணர்ந்தே, கடவுள் பெண் மகளை சிருஷ்டித்தார். இன்றுவரை சிருஷ்டித் தொழிலைக் கிரமாக

நடத்துவதற்கு பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவரின் உதவி அவசிய மாயிருக்கிறது. பிற விலங்குகளைப்போல காட்டில் வசித்து வந்த காலத்திலிருந்தே, மக்கள் இதன் அவசியத்தை நன்கு உணர்ந்து வந்திருக்கிறார்கள். எப்பொழுது காடு வெட்டி நாடு நகரங்களை உண்டாக்கி, நாகரிகமென்ற அடிப்படையில் மக்கள் கால் வைக்கத் தலைப்பட்டார்களோ, அப்பொழுதிருந்தே மக்கள் இதன் தன்மையை நன்கு உணர்ந்துகொண்டார்கள். உணர்ந்தது மட்டுமல்ல, அநுபவத்திலும், சிருஷ்டித் தொழிலை நடத்துவதற்கு, ஆண்—பெண் உதவி எவ்வளவு அவசியம் என்பது தென்படலாயிற்று. ஆகையால் பொறுப்பு இருவருக்கும் ஒன்றாய்ப்போய் விடுகிறது. எனவே சரிவர இப்பொறுப்பை நிறைவேற்றுவதற்கு, இரு பாலாரும் ஒத்த மனப்பான்மையுடன் வாழவேண்டியது முக்கியமான கடமையாகும். ஆணினுடைய குறைபாடுகளை பெண் மகள் திருத்தியும், பெண்ணினுடைய குறைபாடுகளை ஆண் மகன் திருத்தியும், இருவரும் ஒன்று சேர்ந்து ஒத்த மனத்தோடு, இந்த கடமையைப் பூர்த்தி செய்யவேண்டியதிருக்கிறது. மனித சமுகமாகிய உடலுக்கு ஆண் மகன் எலும்பும் ரத்தக்குழாயும் போன்றவன். பெண் மகள் உடல் முழுதும் ரத்தத்தைப் பரவிப் பாயச் செய்யும் இதயம்போன்றவள்.

எப்பொழுதுமே புருஷனிடத்தில் மிருகத்தன்மை நிறைந்திருக்கிறது. பெண்ணிடம் மென்மை நிறைந்திருக்கிறது. மிருகத் தன்மையில் அகங்காரம் குடிகொண்டிருக்கும். மென்மையில் ஆத்ம சமர்ப்பணமும், தொண்டும் குடிகொண்டிருக்கும். சில சில சமயங்களில் ஆண் மகன், பெண்ணின் பெருமையை மறந்துவிட்டு தனக்கு இருக்கும் மிருக பலத்தினால் கர்வம் அடைந்து, பெண்ணை அவமதித்ததோடு, கேவலமான முறையில் நடத்தவும் துணிந்தான். ஆனால் பெண்மகளோ சக்தியிருந்தும் அவ்வாறு எண்ணவில்லை. அவளை தாய்மையும் இல்லப் பொறுப்பும் மென்மையான சுபாவமுடையவளாய் செய்துவிட்டன. ஆகையால் அவள் யாவரோடும் அன்பாகவும் பணிவாகவும் நடக்கவேண்டியதே தன்னுடைய கடமையென எண்ணினாள். இவ்வெண்ணம் அவளுடைய சக்தியை ஒருவாறு அடக்கிவிட்டது. பெண் வரவர பணிவாக நடந்துகொண்டு வருவதைக்கண்ட புருஷன்

அவள்மேல் தன் நோக்கம்போல் அதிகாரத்தைச் செலுத்தத் தொடங்கினான். அவ்வாறு பெண்ணை தன் இஷ்டப்படி நடத்துவது தனக்கு கௌரவம் என்றும் கொண்டான். காதலும் மென்மையும் ஆடவனுக்கு பெண் மகளிடத்திலிருந்து கிடைத்தவை என்று சொன்னோம். அவற்றின் உதவி கொண்டே ஆடவன் பெண்மகளை அடிமையாக்கிவிட்டான். அன்பினாலும் காதலாலும் ஆண் மகனைக் கட்டுப்படுத்தலாமென்று எண்ணி பெண் மகள் ஏமாந்து போய்விட்டாள். அந்த இரு தன்மைகளே அவளை அடிமையாக்குவதாகவும் உணர்ந்துகொண்டாள். ஆண் மகனுடைய அதிகாரத்தை நசுக்க வேண்டுமானால் தன்னிடமுள்ள மென்மை குணத்தையும் காதலையும் உதறித்தள்ளுவதே உசிதம் என்று அறிகிறாள்.

சமூகத்தை நடத்துவிக்கும் பொறுப்பு இன்று ஆடவர் வசம் இருக்கிறது. பெண்மகள் தனது பதவியிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறாள். அவளுடைய கடமைகளை சரிவரச் செய்யவிடாமல் தடுப்பதே தன்னுடைய கடமையென்று புருஷன் இறுமாந்து எண்ணிக்கொண்டிருக்கிறான். இதனால் சமூகத்திற்கு ஏற்படும் கெடுதல்கள் பல. சமூகத்திற்கு நலத்தையும் பலத்தையும் கொடுக்கும் சக்தி நசுக்கப்பட்டிருப்பதனால், ஆண் மக்களின் நிலைமையும் மிக மோசமாய்ப் போய்விட்டது. புருஷனுக்கு அமைதியும் அன்பையும் கொடுத்துக்கொண்டிருந்த சக்தி அழிந்து போய்க்கொண்டிருக்கிறது. புருஷன் பட்ட மரம்போல் சக்தியற்றவனாய், களையிழந்து அதிகாரத்தாலும் ஆணவத்தாலும் குருடனாய் எடுத்த காரியங்களிளெல்லாம் தோல்வியடைந்து விடுகிறான். எப்படி ராவணனுக்கும் சீதைக்கும்—அதாவது அசுரத்தன்மைக்கும் தெய்வத் தன்மைக்கும்—போராட்டம் நடந்ததோ அதே போராட்டம் இன்று வீடுகள் தோறும் நடந்துகொண்டு இருக்கின்றது. புருஷனிடத்திலிருக்கும் அசுரத்தத்தன்மை மாறாதவரையில், பெண்ணாகிய சீதை விடுதலையடைவது கடினம். ஆகையால் விடுதலையை விரும்பும் பெண் குலம் தானே முயற்சியில் ஈடுபடவேண்டும்.

பாரத தேசம் மற்ற நாடுகளிலிருந்து வேறுபட்டது. இதுவரையில் இக்கியூ தேசமானது தனித்த முறையிலே வாழ்க்கைநடத்தி

வந்திருக்கிறது. இனிமேலும் அவ்வாறு தான் நடத்தும். இனி தன்னை நன்ருய் திருத்தியமைத்துக் கொண்டு ஒரு புது உலகத்தை சிருஷ்டி செய்யும். ஆதிகாலத்தில் இந்த தேசத்தில் வாழ்ந்த ஆடவர்களிடத்தில் சில விசேஷ குணங்கள் காணப்பட்டன. அதே போல் இனிமேல் ஏற்படப் போகும் புது சமூகத்திலும் இத்தேசத்திலுள்ள ஆண் பெண் பாலாரிடத்து சில விசேஷ குணங்கள் மலர்ந்து பரிமளிக்கும், ஆகையால் பிறருடைய தயவை எதிர்பார்க்காமல் தன் பலத்தாலேயே புது சமூகத்தைச் சிருஷ்டிப்பதற்கு பெண்மக்கள் முயற்சிக்க வேண்டும். நமது புராதன நாகரிகம் முற்றும் அழிந்து போய் விடவில்லை. அதனில் இன்னும் வளர்ந்தோங்கக் கூடிய சக்தியும் இருக்கிறது. ஆகையால் புது சமூகத்தை நிர்மாணிப்பதற்கு முயற்சிமட்டுமே தேவை.

இந்த புது சமூக அமைப்பிற்கு நாம் புதுசாய் ஒன்றும் ஆலோசனை செய்ய வேண்டியதில்லை. ஆதிகாலத்திலிருந்த கொள்கைளே புரட்சித் தன்மை வாய்ந்தவைகள். அதே புரட்சிக் கொள்கைகளை நாமும் கையாளுதல் நலம். ஆண் பெண் இருபாலாருடைய உள்ளங்களில் இன்று புத்துணர்ச்சிகள் ததும்பிக் கொண்டிருக்கின்றன. ஆனால் இருபாலாருக்கும் உணர்ச்சித் தெளிவு ஏற்படவில்லை. உணர்ச்சி வந்துவிட்டது. உணர்ச்சித் தெளிவு ஏற்பட நாள் பிடிக்காது. ஆகையால் இருபாலாரும் தங்களின் கடமைகளை உணர்ந்து பூர்த்தி செய்ய முயற்சிக்க வேண்டும். ஆதிகாலத்தில் தன்னலத்தைப் பொருட்படுத்தாமல் பெண்மகள் ஆத்ம தியாகம் செய்தாள். அதை தனக்கு ஒரு கருவியாய்க் கொண்டு ஆடவன் தன்னையே கெடுத்துக்கொண்டான். இப்பொழுது ஆண்மகன் ஆத்ம தியாகம் செய்யவேண்டிய காலம் வந்திருக்கிறது. ஆகையால் ஆடவர்கள் தயாராய் இருப்பார்களேயானல், பெண்மகள் தலைமை தாங்கிச் சமூகத்தை நல்லதோர் முறையில் திருத்தியமைத்துவிடுவாள்.

ஆடவன் பெண்மகளுடைய மகிமையை மறந்துவிட்டான். ஆனாள், அவளை அடிமைப்படுத்தி தன்னை உயர்த்திக் கொள்வதற்காக சாஸ்திரங்களைத் தேடியலைகிருன். ஆனல் சாஸ்திர மெழுதியவர்கள் லட்சியமோ இன்று மண்ணோடு மண்ணாய் மறைந்துபோய்

விட்டது. சாசுவதமாய் நிலைத்திருக்கும் சத்தியை ஏறிட்டு பார்க்காமல், யுக தர்மத்தை அனுஷ்டிக்க முயல்கின்றவன் ஒருபோதும், நேரிய உண்மையான வழியில் செல்ல முடியாது. ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கும் ஆண் பெண் சம்பந்தங்கள் பக்ஷபாதமுறையில் எழுதப்பட்டவை. ஆகையால் ஆண்மகன் இந்த சாஸ்திர முறையையே நம்பிக்கொண்டிருப்பானேயானால், புதுச் சமூக முறை அமைப்பை அதன் கனவில்கூடக் காணமுடியாது. எனவே புருஷனுடைய முதல் கடமை யாதெனில்; அவன் சத்தியத்தை நாட்ட முயலவேண்டும். அதிகாரத்தை நாடுதல் கூடாது. சத்தியம் அவனுக்குச் சாந்தியைக் கொடுப்பதோடு, பலத்தையும் தலைமையையும் கொடுக்கும்.

பெண்மகளுடைய கடமை இன்னும் சிறிது கடினமானது. இது வரையில் தனது சக்தியை உதறித் தள்ளிவிட்டு தன்னை ஆத்ம தியாகம் செய்துகொள்வதே சமூகத்திற்கும் தனக்கும் நலமென நினைத்து வந்தாள். இவ்வாறு அவள் எண்ணியதன் பலனைச் சமூகம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறது. அடிமைத்தனம் பெண் பிறரை நம்பி வாழும்படியாய் செய்துவிட்டது. சிருஷ்டியில் தாங்கள் சரி சமத்துவமுடையவர்கள் என்பதைக்கூடப் பெண் குலம் மறந்துபோய்விட்டது. புருஷர்கள்தான் தங்களின் அடிமைத் தனத்திற்கு மூலகாரணம் என்பதையும் மறந்துபோய் விட்டார்கள். தன்னிடத்தில் தாய்மை என்ற சக்தியும், மனைவி என்ற சக்தியுமல்ல, உலகத்தையே அழிக்கக்கூடிய சக்தி தன்னிடமுள்ளதென்பதை பெண்மகள் மறந்துவிட்டாள். தங்களுக்கும் தங்களைச் சார்ந்த ஆடவர்களுக்கும் நலம் செய்ய விரும்பினால், பெண்மகள் சமூகத்திலுள்ள குறைபாடுகளைப் போக்குவதற்கு முதலில் கங்கணம் கட்டிக்கொள்ளுதல் வேண்டும். புருஷர்கள் தங்களின் அதிகாரத்தை ஸ்தாபித்துக் கொள்வதற்காக எத்தனித்துக் கொண்டிருப்பார்கள். அதேபோல் பெண்ணும் செய்யவேண்டுமென்பதில்லை. புருஷன் அறியாமையால் அதிகாரத்தை நாடுகிறான். பெண் அவ்விதம் நாடமாட்டாள். அவளது சுபாவம் தியாக குணம் வாய்ந்தது. ஆகையால் அவளால் பக்ஷபாதமுறையில் நடந்துகொள்ள முடியாது. எனவே அவள் சமூகத்தை சீர்திருத்தி யமைப்பதற்கு

முயலவேண்டும். அப்பொழுதுதான் அவர்களால் புருஷர்களிடமுள்ள மிருகத் தன்மையை அடக்கியாள முடியும். எவ்வளவோ கேவலமான நிலைமையில் இருந்தபோதிலும் பெண்மையின் சக்தி இன்னும் முற்றும் அழிந்துபோய் விடவில்லை. மனம் வைத்தால் பெண்மணிகள் தங்களின் காரியங்களை சீக்கிரத்தில் சாதித்துக் கொள்ளமுடியும். புருஷர்களின் உள்ளத்தையும் நலம் தரும் முறையில் புரட்சி செய்து திருப்ப முடியும். அன்பும் காதலும் அவளை அடிமைப்படுத்திவிட்டது. மன உறுதி அவளைக் கைதூக்கிவிடும்.

துரோக குணமுள்ள புருஷனைப் பார்த்து கீழ்த்திசை இவ்வாறு சொல்லுகிறது. "ஏ ஆண்மகனே! நீ பெண் சக்தியை கேவலமாய் நடத்தி வந்திருக்கிறாய். அதனால் நீயும் கேவலமடைந்து போய்விட்டாய். கலைக்குத் தாயகமாய் விளங்குபவளை நீ அலட்சியம் செய்தாய். அதனால் கலையறிவு சூனியமாய் போயிற்று. இனிமேல் அவ்வாறு செய்யாதே. பெண்குலத்தை தலைகுனிந்து வணங்கு. நீ நலம் பெறுவாய்''.

பிறகு பெண்ணைப் பார்த்து இவ்வாறு சொல்லுகிறது. "ஏ தேவி! நீ லக்ஷ்மி அவதாரமெடுத்து உலகிற்கு ஐசுவரியத்தைக் கொடுத்தாய். சரஸ்வதி ரூபங்கொண்டு உலகின் அறியாமையைப் போக்கினாய். சீதையும், ராதையுமாகப் பிறந்து உலகிற்கு காதல் என்பது என்ன, சேவை என்பது என்ன என்பதைக் கற்றுக் கொடுத்தாய். ஆகையால் தாயே உலகை நல்வழிப் படுத்த. நீதான் முன்னணியில் நிற்கவேண்டும். அப்பொழுதுதான் உலகம் க்ஷேமமடையும்."

['சாந்த்' என்ற ஹிந்தி பத்திரிகையிலிருந்து மொழிபெயர்ப்பு. மொழி பெயர்த்தவர்: AL. நடராஜன்.]

# இளமை மணம்

(S. T. R. சாமி)

"இளமை மணம் கொடிது கொடிது" என்று கூப்பாடு போடும் தொண்டர்கள் நம் நாட்டில் பலருண்டு. ஆனால் அவர்கள் தம் மத சாஸ்திரங்கட்கும், தம் வீட்டிலுள்ள வைதீக கிழங்களுக்கும் பயந்து இக் கொடிய செய்கையை ஒழிக்க முன் வராதிருக்கின்றனர். இவ் விளமை மணம் ஒழிந்துவிட்டால் நம்நாட்டு விதவைப் பெண் தொகையும் குறைந்துவிடும். பொதுவாக நம்நாட்டில் இளமையில் இறந்துபோவோர்களின் தொகைதான் அதிகமாக இருக்கிறது. ஆகையால்தான் இளமை மணம் குறைந்தால் விதவைகளாவோர் தொகையும் குறையுமென்று சொல்லுகிறோம். சில காலத்துக்கு முன்புகூட சாரதாச் சட்டம் என்னும் இளமை மண தடுப்புச் சட்டம் ஒன்றை நிறைவேற்றினார்கள். அதை அமுலுக்கு கொண்டுவராதிருக்க நம் வைதீகர்கள் செய்யும் சூழ்ச்சி இன்னும் சரியாக ஓய்ந்தபாடில்லை. இவ் வைதீகக் குடுக்கைகளுக்கு நம் நாட்டில் பெண்மக்கள் முன்வந்து தக்க பாடம் கற்பியாமல் இருப்பதினாலேயே இவர்களின் ஆர்ப்பாட்டம் ஒலித்துக் கொண்டு இருக்கிறது. இவ் விளமை மணத்தினால் எத்தனை மக்கள் துன்ப மடைகின்றனர். எத்தனை பெண்கள் கஷ்டத்திற்கு ஆளாகின்றார்கள் என்று நாம் சிந்திப்பதே கிடையாது. பத்து வயதுப் பெண்ணை மணஞ் செய்த 30 வயது ஆடவன் எவ்வாறு அப் பெண்ணிடம் நடந்துகொள்வான் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? எத்தனையோ விடங்களில் இப் பெண் குழந்தைகள் தம் முரட்டுப் புருஷனின் மிருக இச்சைக்கு ஆட்பட்டு உடனே இறந்திருக்கின்றன. பத்திரிகை படிக்கும் நண்பர்களுக்கு இது புதியதல்ல. எத்தனையோ விடங்களில் இவ்விதமான சங்கடங்கள் நடந்திருக்கின்றன. ஆனால் இவ்விளமை மணம் என்னும் கொடுஞ் செயலைப்பற்றி யாம் கண்டிக்கும்பொழுது மணம்புரியும் யுவர்களை மாத்திரமல்ல, அன்னோரின் பெற்றோர்களைத்தான் பெரிதும் கண்டிக்கிறோம்.

மற்றும் நம் இந்திய நாடு உஷ்ண பூமி. உஷ்ணத்தினாலும் ஏனைய சில காரணங்களினாலும் தற்சமயம் பெண்கள் 9 வயதில்

கூட பூப்பெய்துகின்றார்கள். பூப்பெய்தி ஒன்றிரண்டு ஆண்டுகளில் சாதாரணமாய் ஹிந்துக்கள் வீடெங்கும் திருமணம் செய்யப்படுகின்றது. இது இளமை மணம் ஆகாதா? என்று ஹிந்து நண்பர்களை வினவுகின்றேன். பெண்களுக்கு இருபது வயது மட்டும் கல்வி கற்கும் வயதாகும். அதற்கிடையில் இளமைப் பருவம் என்றே சொல்லவேண்டும்.

9, 10 வயதிலேயே திருமணம் செய்யப்பட்ட பெண்-உடலின் உறுப்புகளெல்லாம் முற்றும் வளர்ந்து உடல் நலம் பெறாத பெண்-புருஷனின் கூட்டுறவால் இளமையில் ஒளி மழுங்கி உடல் உரம் குன்றி இருபது வயதிற்குள் 5, 6 பிள்ளைகளுக்குத் தாயாகிக் குடும்பக் கவலை, மக்களின் தொல்லை முதலிய பலவற்றாலும் கஷ்டப்படுகிறாள். எலிக் குஞ்சுகள் போன்ற மக்கள் அடிக்கடி கஷ்டப்பட நேரிடுகிறது. அதன் பிறகு, தான் நடக்கும்பொழுது புல் தடுக்கினாலும் கீழே விழுந்துவிடுவாள். இவ்விதமான சங்கடங்கள் நடக்கக் காரணம் இவ்விளமை மணந்தான் என்பதை உணர்ந்து அவசரப்படாமல் பெண்கட்கு 18 வயது வந்த பிறகு விவாகம் செய்ய முயற்சிப்பார்களாக!

---

# வேளாள சமூக கட்டுப்பாடும் விதவைகளின் கண்ணீரும்

(அரியக்குடி வே. ஸ்ரீனிவாஸன்-மேமியோ)

அன்பு மிகுந் தோங்கும் சகோதரர்களே! நமது சமூக கட்டுப்பாடுகளில் உங்களுக்குத் தெரிந்த சிலவற்றையே யான் இங்கு குறிப்பிட்டு ஞாபகமூட்ட விரும்புகிறேன். இதைக் கண்ணுறும் எனது நேய சகோதரர்கள் இக் கட்டுரையை உவகையுடன் வரவேற்று, அஃதேபோல் நமது சமூகத்தில் இருந்துவரும் தீமைகளை நீக்கி நம் சமூகத்தைப் புனருத்தாரணம் செய்யக் கோருகிறேன்.

நம் சமூகத்தில் நாம் கவனிக்கவேண்டிய முக்கிய அம்சம் ஒன்று. அதாவது நம் சமூகத்தில் சிலர் பெண்களுக்கு தக்க பருவ

காலம் வருமுனமே திருமணஞ் செய்து வைப்பதுமன்னியில் பருவமடையாக் கன்னிகையை வயோதிக தசை யடைந்த ஆடவருக்கு விவாஹம் முடித்துவிடுகின்றனர். ஆஹா! நிறையொத்த மணாளன் வாய்க்காததால் அப் பால்யப் பெண் படும் அவஸ்தை தானென்னே? இக் கொடுமைக்கு ஊழித் தீயும் நிகரில்லை யென்று தான் சொல்லவேண்டும். நிற்க, அந்த ஆடவன் சிறிது நாளில் உயிர் நீத்து விடுவாராயின் பெண்ணின் வாழ்நாளே பாழ்நாள்தான். அந்தோ! அவ்விளம் பெண்மணிகளின் கணவன் இறந்ததும் அந்நாரிமணிகளை சமூகம் படுத்தும் கொடுமை தானென்னே? ஆ, கொடிது மஹா கொடிது. என்னே சமூகக் கட்டுப்பாடு? ஆணுக்கொரு நீதி! பெண்ணுக் கொரு நீதி! ஆண்டவன் படைப்பில் இத்யாதி த்வேஷங்களெல்லாம் எங்கிருந்து முளைத்தனவோ? ஒரு ஆடவன் தன் மனைவியுடன் இல்லறம் நடத்தி சகல போகானுபவங்களையும் அநுபவித்து 10 அல்லது 15 ஆண்டுகளுக்குப் பின் அம்மங்கை இறக்கும்படி நேரில், அப்பெண்ணை வீட்டினுள்கிடத்தி பெண்கள் கூடி அழுதுகொண்டிருக்க, இறந்த பெண்ணின் ஆடவருக்கு மறு விவாகம் முடிக்க பெண் இருக்குமிடம் பார்த்து அப்போதே சில ஐதீகப் பேய் பிடித்த கிழட்டுப் பிணங்கள் செல்கின்றனர்.

ஹே! வேளாள சமூகமே! உன்பெருமைதான் எங்கே ஒளிந்து புதைந்துவிட்டது? ஒரு பெண்ணின் மணாளன் உயிர் துறந்துவிடில் இளம் பிராயத்தில் கணவனை இழந்து சகல இன்ப சுக போகங்களையும் துறந்து பரதவிக்கும் நிலைமையில் சமூக கட்டுப்பாட்டால், இறந்தவன் மனைவி அணிந்திருந்த ஆபரணங்களைக் கழற்றி, மஞ்சள் குங்குமங்களைக் களைந்து, அத் திலகவதிகளை விதவை யென்றும் அமங்கிலி யென்றும் நாமகரணம் சூட்டிவிடுவதோடு மல்லாமல், அவர்களைக் கண்டால்கூட துர்ச் சகுனமாகு மென்கின்றனர். அவர்கள் எந்த வொரு சுபகாரியங்களிலும் பிரவேசிக்கக் கூடாதாம். இவர்களின் கடின சித்தந்தானென்னே? அப்படிப்பட்ட சமூகம் இருந்தென்ன ஒழிந்தென்ன. ஹே சமூகமே! இளவல்கள் மனம் புண்படுமாறு செய்து வருவதை நான் கண்டிக்கிறேன். இளஞ் செல்விகள் மனம் நொந்து 'சாக்ஷாத்' குணசீலனிடத்தில்

எத்தனை தரமோ முறையிடக் கூடும். அவர் உன்னைக் கட்டாயம் தண்டிப்பார் என்பதை மறக்காதே. பிர்ம சிருஷ்டியில் பெண்களை சுமங்கிலி யென்றும் கைம்பெண் என்றும் வேறுபாடு செய்து படைப்புத்தொழில் புரியவில்லை யென்பது யாரும் மறுக்க முடியாத தாகும்.

கணவனை இழந்த பெண்கள் மறுமணம் செய்து கொண்டு மாசிலா பாரதநாட்டில் சதிபதிகளாய் மற்றுள்ள பெண்களைப் போல் வாழ சமூகம் ஏன் இடந்தரக் கூடாது? இவ்வனிதா ரத்தினங்கள் எத்தனை காலந்தான் தம் இயற்கை யுணர்ச்சியை அடக்கியாள முடியும்? திடசித்தமுள்ள ஆடவனே அறிவிழந்து, எத்தனையோ அநாகரிகத்தி லீடுபடுகிறு னென்றால், படிப்பற்ற பெண்கள் எப்படி யிருந்துவரமுடியும்? மாதர் மறுமணம் செய்யாத கொடுமையினா லல்லவா நம் அருமைப் பெண்மணிகள் தங்களுடைய் விலைமதிக்க வொண்ணாத மாணிக்கத்தை (கற்பு) யிழந்து மறைமுகமாக விபசாரத்தி லீடுபட்டும், அதினால் விளையும் தொல்லையினால் தனக் கிஷ்டமானவனைக் கூட்டிக்கொண்டு பரதேசம் போய்விடுகின்றனர். மற்றும் சிலருக்கு கருவுண்டாகி அக்கதை மருந்துண்டு சிதைக்க நேரிடுகிறது. அதனால் சிசுஹத்தி தோஷம் நம் சமூகத்தை தாக்குவது மன்னியில் அப்பெண்மணியும் தற்கொலை செய்து இறந்துபட நேரிடுகின்றது. இத்யாதி காரியங்களால் நம் சமூகத்திற்கு, அனந்தம் இழுக்குப் பெயர்கள் கிடைத்து விடுவதும் கண்கூடு. இன்றியும் கணவனை இழந்த நாரிமணிகளின் கண்ணீர்த் தேக்கம், ஒருகாலத்தில் நம் சமூகத்தைத் தாக்குமென்பதை ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்து பார்த்தால் விளங்கும். ஆனதினால், நம் சமூக இளைஞர்களே! வாலிப சிகாமணிகளே! இவ்விதம் வருந்தத்தக்க செயல்கள் எதனால் நடக்கிற தென்று கொஞ்சம் சிந்தித்துப் பார்ப்பீர்களாயின், நமது சமூக கட்டுப்பாட்டினால் தான் என்பது தெற்றென விளங்கும். இதுபோன்ற கட்டுப்பாடுகள், நம் சமூகத்தில் பெரிதும் கையாளப்படுவதால் அதை ஒழித்து சமூகம் சீர்பெற்று வாழவேண்டும். அதற்கு நம் சமூக அறிவு சால் வீர இளைஞர்கள் மாதர்மறுமணம் செய்துகொள்ள உதவிசெய்ய முன்வர மேண்டும். தாய் தந்தையாராயிருப்பினும்,

மனித நீதியை வெறுக்கும் பழங் குடுக்கைகளுக்கு நீதி கூறி மூட மனப்போக்கை நல்வழிப்படுத்தி சமூக கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிந்து ஒழுக்கம் பரவச்செய்ய வேண்டியது வாலிபர்கள் கடமையல்லவா!

ஓர் சமூகம் முன்னேற்றமடைய வேண்டுமானால் அந்தச் சமூக இளைஞர்களே அதற்கடிகோலிகளாகவும் காரண புருஷர்களாவும் இருக்க வேண்டுமென்பதை பாரதச் செல்வர் வீர ஜவகர் அடிக்கடி முழங்கி வருவதை மீண்டும் ஞாபகமூட்ட விரும்புகிறேன். ஆதலின் ஜெயதேவியாம் பாரதத்தாயின் மைந்தர்களே, வீரங்குன்றா இளைஞர்களே! மேலே குறிப்பிட்டுள்ள கொடுமைகளேயும் கட்டுப்பாடுகளையும் அறவே ஒழிக்க முன் வாருங்கள். நம் சமூகத்தை முன்னேற்றமடையச் செய்யுங்கள். நாரீமணிகளாம் நம் அருமந்த சகோதரிகளின் மனக்குறையை அகற்ற கங்கணம் கட்டி, ஜெயபேரிகை கொட்டி, மார்பு தட்டி மாண்பையூட்டி மாதர் மறுமணச் சங்கமொன்றையீட்டி தாயின் மணிக்கொடியை அதன் சிகரத்தில் நாட்டி, தமிழ்த் தாயைப் போற்றி, எல்லோரும் மோர்குலம் எல்லோருமோரினம் எல்லாரும் நம் நாட்டு மக்கள் என்ற கலை வள்ளல் பாரதியாரின் நறு மலர்ப்பா மொழிக்கொப்ப ஒத்துழைக்க முன் வருவீர்களென்று இச் சிறியேன் பெரிதும் மன்றாடுகின்றேன்.

---

# ஜவாப்தாரி யார்?

(குன்றை மு. பெத்தய்யா)

நானும் எனது நண்பன் திவாகரனும் எனது மாமனார் ஊரை அடைந்தோம். அப்போது அந்த ஊரின் மேலக்கோடியில் ஓர் பெரிய கேணியிருந்தது. அந்த இடத்தில் பெருங்கூட்டமாக இருந்தது. அங்கு நானும் திவாகரனும் போனேம். அங்கு கண்ட காட்சி என்ன? ஒரு பெண்ணின் பிரேதத்தை கேணியிலிருந்து தூக்கிப் போட்டிருந்தார்கள். பலர், பலவிதமாக பேசிக்கொண்

டார்கள், அங்கிருந்து நாங்கள் நேரே கடை வீதி வந்தோம். ஒரு சர்பத் கடைக்காரனிடம்போய் சர்பத் சாப்பிட்டுவிட்டு அங்கேயே உட்கார்ந்தோம்.

'ஏனய்யா அந்த கேணியண்டை என்ன கூட்டம்?" என்றேன் நான் கடைக்காரனைப் பார்த்து.

"அது பெரிய கதையய்யா இந்த பக்கம் நல்லா திரும்பி உட்காருங்கள் சொல்கிறேன்." என்றான் கடைக்காரன்.

நாங்களும் நன்றாக திரும்பி உட்கார்ந்தோம். கடைக்காரன் சொல்லத் தொடங்கினான்.

ஃ ஃ ஃ

"சாமிநாதபிள்ளை ஓர் தனவந்தர், தர்மசீலர், கொஞ்சம் வைதீகப் பேர்வழி, பார்வைக்கு ஆள் மிகவும் அழகானவர், அவருக்கு ராஜாம்பாள் என்ற பெண் குழந்தை ஒன்றுதான்; வேறு குழந்தையில்லாததால் நிரம்ப அருமையாக வளர்த்துவந்தார். ராஜாம்பாள் எட்டாம் வகுப்புவரை வாசித்தாள். அப்பொழுது அவளுக்கு வயது 14. காலா காலத்திலும், பருவமடைந்தாள். இரண்டு மூன்று வருடங்கள் ஓடி மறைந்தன. ராஜாம்பாளுக்கு கல்யாணப் படலம் ஆரம்பமாயிற்று, பட்டம் பெற்ற இளைஞர் பலர் நான் நீ என்று போட்டி போட்டனர். கடைசியில் அருணாசலம் என்னும் வாலிபனுக்கு நிச்சயமாகிவிட்டது. மாப்பிள்ளையும் ஓர் பணக்கார வீட்டுப் பையன். சொல்லவா வேண்டும்? கல்யாணம் ஏகதடபுடல்!

கல்யாணம் நடந்த நான்காம் மாதமே அருணாசலம் மேற்படிப்புக்காக சென்னைக்கு புறப்பட்டுவிட்டான். போய் இரண்டு ஆண்டுகள் கடந்தன. ராஜாம்பாளின் துரதிருஷ்டவசமாக அருணாசலத்திற்கு "டைபாய்ட்" சுரம் கண்டது. டாக்டர்கள் எவ்வளவோ சிகிச்சை செய்தும் பயன்படாமல் இறந்துபோனான், உடனே தாய் தந்தையருக்கு தந்தி பறந்தது. அழுதார்கள். புரண்டார்கள், ஆவதென்ன? பதினாறு நாட்கள் சென்றன. உறவின் முறையார் ராஜாம்பாளின், நல்ல சேலை, நகைகள், மாங்கல்யம் எல்லாவற்றையும் பறித்துக் கொண்டனர்.

ராஜாம்பாளின் நிலைமை அவளது கிழ தாய் தந்தையர் உள்ளத்தை உலுப்பியது. தவமிருந்து பெற்ற குழந்தையல்லவா? இரண்டு மாதங் கழித்து தன் தாய் வீடு வந்து சேர்ந்தாள் ராஜாம்பாள். மாமனாரின் வீட்டைவிட தாய் வீட்டில் நிரம்ப கஷ்டத்திற்குட்பட்டாள். ஏன்? சாமிநாத பிள்ளையின் வைதீகப்போக்கு.

காலச்சக்கரம் சுழலுகிறது. நாட்கள், மாதங்கள் வருடங்கள் கடந்தன. சாமிநாதபிள்ளை காலஞ்சென்று நிரம்ப நாட்கள் ஆகிவிட்டன. ராஜாம்பாளின் மனதைப்பறிக்க காமன் பகீரதப் பிரயத்தனம் செய்தான். அவனுக்கு அடிமையானாள் ராஜாம்பாள். சிறு பெண், உலகம் இன்னதென்றறியாதவள், என்ன செய்வாள் பாவம்? நாலைந்து மாதங்கள் கடந்தன. அவள் உடலில் மாறுதல் ஏற்பட்டது. அது வெளிக்குந் தெரிந்துவிட்டது. என்ன செய்வது? சமூகப் பெரியார்கள் பலர் கூடினார்கள். ராஜாம்பாளையும் அவளது தாயையும் அழைத்து வரும்படி கட்டளை பிறந்தது. ஆனால் அவளது தாயை எங்குமே காணவில்லை. ராஜாம்பாளை மட்டும் கேணியில் பிரேதமாகக் கண்டார்கள். அவ்வளவு தான் கதை" என்று கூறி முடித்தான் கடைக்காரன்.

அப்புறம் நானும் திவாகரனும் என் மாமனார் வீட்டை வந்தடைந்தோம். அங்கே இரண்டு நாள் தங்கிவிட்டு மறுபடியும் எங்கள் சொந்த ஊருக்கு வந்துவிட்டோம். இரண்டு வருடங்கள் கழிந்து நான் மட்டும் என் மாமனாரின் ஊருக்குப் போனேன். முன் இருந்த சர்பத் கடையை காணோம், அந்த இடத்தில் சிறு குழந்தைகளின் கூட்டம் ஒன்று காணப்பட்டது. போய் பார்த்தேன். ஒரு கிழவி பைத்தியம் பிடித்துப்போய் "ராஜம், ராஜம்" என்று முனகிக்கொண்டேயிருந்தாள். பக்கத்தில் விசாரித்தேன். முன் கேணியில் விழுந்திறந்த ராஜாம்பாளின் தாய்தான் இவள் என்றறிந்தேன். சமூகம், இவளது பிதற்றலையும், இவள் பைத்தியமாக திரிவதையும் பார்த்துக்கொண்டுதானிருக்கிறது. ஒரு கொலைக்கும், ஒரு குடும்பம் நாஸ்தி அடைந்ததற்கும், ஜவாப்தாரி யார்? சமூகமா? அல்லது சமூகத் தலைவர்களா?

---

# தியாக குமாரி

[பி. தனுஷ்கோடி]

அளவற்ற செல்வம்! எல்லையற்ற இன்ப போகம்! கர்வம் மிகுந்த காதல் வாழ்க்கை! திறமைக்கேற்ற (சூழ்ச்சிக்கேற்ற) ஊதியம்! உல்லாஸ மாளிகை! கம்பீரமான மண்டபம்! அழகு பொருந்திய நந்தவனம்! வேறென்ன வேண்டும்? அகம்பாவம் நிறைந்த மனத்தினனாய் வாசு, வஸந்த விலாஸ் மாளிகையின் உப்பரிகையில் உலாவிக் கொண்டிருந்தான். சூழ்ச்சி நிறைந்த அவன் கண்கள் நாற்புறமும் வான வெளியைப் பார்த்துக் கொண்டிருந்தன.

சற்று நேரத்தில் மெத்தைப்படிக் கட்டின் வழியாக ஓர் யுவதி கையில் தாம்பூலத் தட்டுடன் ஏறி வந்தாள். பூரண சந்திரனைப் பழிக்கும், எழில்மிகுந்த அவள் வதனம் வாடி கருத்திருந்தது. சோபாவில் அமர்ந்திருந்த வாசுவினிடம் தட்டைக் கொடுத்து விட்டு, சற்றே நாணத்துடன் ஒதுங்கி நின்றாள்.

அதிகம் என்ன? காதல் வாழ்க்கையின், இனிய பாகத்தை நடித்துக் கொண்டிருந்தனர். சந்திரனும் தன் முழு சக்தியுடன் ஒளிவீசினான்.

ஃ ஃ ஃ

"அம்மா! சாந்தா! எழுந்திரு! மணியோசை கொட்டுகிறதே! இன்னமா தூக்கம்?........"

"என்னம்மா! தினம் இப்படி தொந்திரவு செய்யறே? நல்லா விடியட்டுமே!........"

"நம்ம கஷ்டகாலம் என்னம்மா பண்றது? அந்த ஈசுவரன் நம் தலையிலே அப்படி எழுதிட்டான்!...."

"என்னம்மா! நல்லா சனீசுவரனைக் கட்டிக்கிட்டு அழறே? அவன் என்னத்தை எழுதிட்டான்? ஏன் நாம்ப பாத்து செய்யப் படாதோ?"

"ஆமாம்மா ஆமாம்! இல்லேன்னு அவன் உலகத்திலே பணக்காரன்னு, ஏனென்னு ஏன் பொறப்பிக்கிறான்? என் முன்ஜென்ம பாபத்தின் பலன் தான் இப்படி ஆட்டிவைக்கிறது"

"அம்மா! கடவுள்னு ஒருத்தர் இருந்தாலும், ஏழை, பணக்காரன் என்று பிரிச்சு, படைக்கலே; எல்லாம் பொறக்கும்போதே பணம் கொண்டு வருகிறார்களா? இல்லே. சூழ்ச்சியாலும், அடிமைப்படுத்துவாதாலும், நம்மைப் போன்ற அனாதைகளை ஏமாத்தி நம் ரத்தத்தை உறிஞ்சி, கால்வயிற்று கஞ்சிக்கு கூலி கொடுக்கிறார்கள். இது என்ன நீதி? இது என்ன மடமை? எத்தனை நாளைக்கு இப்படி பொறுப்பது? அம்மா! கூடிய விரைவில், ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசமே அற்றுப் போய், எல்லோரும் வேலை செய்யவேண்டும். எல்லோரும் கூலி வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற சர்க்கார் வருவார்கள்...."

"அப்படீன்னு....நம்ம வாசுதேவர் கூடவா?

"ஆமாம்மா! ஆமாம்! உங்க வாசுதேவ மூர்த்தியும், மற்றொரு திரிமூர்த்தி யிருந்தால் அவர் கூடத்தான்! பாடுபடும் பாட்டாளி மக்களுக்குத் தான், பணம்! சோறு! துணி! எல்லாம், மற்ற சோம்பேறிகள் பட்டினி தான்!........

நகரின் தென்புறக் கோடியிலுள்ள ஓர் சிறு குடிசையின் முற்றத்திலே, தாயாருக்கும் சாந்தாவிற்கும் மேற்கண்ட சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது விடியற்காலை மணி நாலரை இருக்கும். மில்லில் ஊதும் ஊதுகுழலின் சப்தம் கேட்டமாத்திரத்தில், அரைத் தூக்கத்தில் இருந்த தாயார் அவசர அவசரமாக எழுந்து, குமாரத்தியை எழுப்பினாள். எப்பொழுதும் பேசுவது போலவே தமாஷாகப் பேசிக்கொண்டே சாந்தா கம்பு இடிக்க, அதை முறத்தில் கொட்டிப் புடைத்துக்கொண்டிருந்தாள் தாயார்.

ஆனால் வழக்கமாகப் பேசப்படும் பேச்சுகளைப் போலல்லாமல் இன்று சாந்தா பேசியது—தாயாருக்கு ஆச்சரியத்தையும், அச்சத்தையும் கொடுத்தது.

ஏழை ஹரிஜனப் பெண் தாயாரு என்றால், சேரியிலுள்ள சிறு பிள்ளைகூட வீட்டைக் காண்பிக்கும். சின்ன வயதில் எப்படியோ கஷ்டப்பட்டு அருமையான ஒரே குமாரத்தியான சாந்தாவை வளர்த்துவந்தாள். அவர்களில் கைம்மை வழக்கம் இல்லையெனினும், கட்டிய கணவன் மரித்தபின்—ஆசை முகம் மறைந்தபின் வேறொரு கல்யாணம் செய்து கொள்வது அவ்வளவாகத் தாயாருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே தன் ஆசை முழுவதும்—உழைப்பு முழுவதும் சாந்தாவிற்காகச் செலவழித்துவந்தாள். சாந்தா என்ற பெயர் ஏற்பட்ட காரணம் விசித்திரமானது. ஆதியில் சாந்தாவின் பெயர் செல்லியம்மாள். கல்வியில் காட்டிய ஊக்கமும், சாந்தமயமான தோற்றமும், அடக்க ஒடுக்கமான நடையுடையும் அவளுக்கு பள்ளி உபாத்தினியால் 'சாந்தா' எனப் பெயர் கொடுக்கும்படி செய்தது.

சாந்தாவை ஓர் உபாத்தினியாகக் காணவேண்டும் எனத் தாயாரு விரும்பினளெனினும், பொருளாதார நெருக்கடி ஆசையை நிராகரித்தது. அவ்வூரில் புதிதாக ஏற்பட்ட மில்லை, ஏராளமான ஹரிஜனங்கள் நாடுவதும், நீடித்த தொழில் அதனால் கிடைப்பதும், வியாபார மந்தமும் கூடி அவளை மில் தொழிலாளியாகச் செய்தது. சேரியிலேயே சிறு கடை வைத்திருந்ததையும் துறந்து,—சிறிய முதலாளியான அந்த சுயேச்சைத் தொழிலை வெறுத்து, மாய அடிமை வாழ்வில் புகுந்தாள். மில்லினால் பெரும் நன்மை யடையலாம் எனக் கனவு கண்டாள். வெள்ளைக்கார இரும்பு இயந்திரங்களுக்கு முன், வலிமையற்ற ஏழை ஹரிஜனங்களின் மெல்லிய சரீரம் எங்கே? மில்லில் சென்ற மூன்று மாதங்களில் துரும்பாய் இளைத்துவிட்டாள். கடும் உஷ்ணத்தினிடையே செய்த சலியா உழைப்பின் எதிரொலி எலும்புக்கூடு.

அறிவற்ற அவள் மூளை வேலை செய்தது. மீண்டும் கடை வைக்கவோ முதலில்லை. எதிர்கால வாழ்வைப்பற்றி எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினள். முடிவுதான் கிடைக்கவில்லை. வறுமை எனும் பேய்க்கு ஆசையை அர்ப்பணம் செய்தாள். பெருமை வாழ்வு படுகுழியில் வீழ்ந்தது. விவேக புத்தியின்மை

யால் மில் அரக்கனுக்கு வாழ்வை—உடலை அர்ப்பணித்தாள் சந்தா! ஆம்! வேறு வழி?

தொழிலாள தோழர்களின் கஷ்டம்! அதிகாலையில் எழுந்து, அன்றைய உணவை சமைத்து, காலைப் பசியாற்றிக்கொண்டு, மிகுதியை 'கலயத்தில்' போட்டுக்கொண்டு வேலைக்குப் போகவேண்டும். மாலை ஆறு மணிக்கு வேலை முடிந்ததும், ஊருக்கு இரண்டரை மைல் தூரத்திலிருக்கும் மில்லிலிருந்து ஓய்ந்த உடலுக்கு உறுதி கொடுத்து, தள்ளாடி வரவேண்டும். துவண்டு வாடும் மெல்லிய சரீரம் வீடு வந்ததும் சோர்ந்து விழுந்துவிடும். அயர்ச்சியுற்ற அவள் தேகம் விழிப்புற்றால் இரவு போஜனம். இன்றேல் மறுநாள் அதி காலை வழக்கம்போல்! ஓய்வு ஒழிவற்ற வேலையை நாள் முழுதும் செய்து தொழிலாள ஸ்திரீகள் கண்ட பலன் என்ன? வயிறார உணவு உண்டா? நல்ல புடவை உண்டா? ஒரு கோவில், குளம், தேர், திருவிழா போன்ற சந்தோஷம் உண்டா?

உப்பற்ற கூழுக்கும், கிழிந்த கந்தல் துணிக்கும், பிறக்கும் போதே கொண்டு வந்த 'தலைவிதி'க்கும் மாற்று இல்லையா? உழைப்பைப்பெற்று ஊதியம் அடையும் முதலாளி பிரசவ காலத்திற்கு உதவி யளிக்கிறாரா? வேலை செய்தால் கூலி! அந்தோ! மில் அநீதியில் பெண் மக்கள் படும் துயரம் சொல்லி முடியாது. வடநாட்டில் பெண் தொழிலாளிகள் மறியல், சத்தியாக்ரஹம், வேலை நிறுத்தம் நடைபெறுகின்றனவாம். அவர்கள்மீது விஷக் கண்ணீர் புகையும், நடக்கின்றனவாம். ஐயோ! சமூகத்தில் பெண் மக்கள் படும் அவஸ்தையைக் காட்டிலும் நவீன நாகரிக வாழ்வில் ஸ்திரீகள் படும் துயரைக் காண துக்கத்துடன் வெட்கமும் கலந்து வெளிப்படுகிறது. அபலைகள் என்று கூறப்படும் பெண்கள்மீது கண்ணீர் புகையை உபயோகிப்பதால், நாகரிகம் எவ்வளவு உச்ச நிலையை அடைந்துள்ளது என்பது தெளிவாக காணக்கிடக்கிறது.

நிற்க, சாந்தா நல்ல பருவ யுவதி. வளம் பெற்ற அங்க உறுப்புகளும், கவர்ச்சி பொருந்திய மாநிற மதிமுகமும், இளமையின் எழுச்சியும் பார்ப்போர் பரவசமடையும் தன்மையன.

அகங்கார எண்ணமும், துரோக சிந்தனையும், சூழ்ச்சி மதியும் பெற்றவன் வாசு! கதையின் ஆரம்பத்தில் கூறியபடி அழகிய நடன நங்கைகளை வைப்பு வைத்திருப்பினும், அவன் காமக் கண்ணில் உணர்ச்சியுள்ள சிலா ரூபமாக சாந்தா தோன்றினாள். ஓர் உயரிய சிற்ப சாஸ்திரியே சாந்தாவை உற்பத்தி செய்து, தெய்வீக சக்தியால் உயிர் பெற்றிருக்கவேண்டும் என்பது அவன் துணிபு. வறுமையின் கோர நர்த்தனமும், வாழ்க்கையின் அனுபவ மின்மையும், சூழ்ச்சியை வெல்லச் சக்தி யில்லாமையும் பணத்தின் பேராசையும், தாயாருவை துரோகச் சிந்தனைக்கு—ஆட்கொள்ளச் செய்தன.

குளிர் நிறைந்த மார்கழி மாதம், மப்பும் மந்தாரமுமாக இருந்த வியாழக்கிழமை இரவு பத்து மணிக்குத் தாயும், மகளுமாக வாசுதேவ மூர்த்தியின் மாடியில் உலாவிக்கொண்டிருந்தனர். காரணம் தெரியாது குழம்பிய உள்ளத்துடன் மருண்ட பார்வை பார்த்துக்கொண்டு ஆலோசித்துக் கொண்டிருந்தாள் சாந்தா. நிச்சலனமான நீலவானப் பரப்பை கவலையற்ற மனத்தினளாய் நோக்கிக்கொண்டிருந்தாள் தாயாரு.

சுமார் முப்பது நிமிஷத்தில் மணி ஓசை எழும்பிற்று. உடனே விளக்கு அணைந்து எரிந்தது. தாயாரு மறைந்துவிட்டாள். ஆனால் அவ்விடத்தில் சுந்தர வாலிபன் காணப்பட்டான். கற்பழிக்க வந்த காதகன் போல் சந்சயப்பட்டாள் சாந்தா. 'பிரியே' என்று அடி எடுத்து வைத்தான் பாவி வாசு! "நில்! உன் ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ள என் தேகத்தை முழுதும் உனக்கே தருகிறேன். ஆனால் ஒன்று. மதிகெட்ட என் தாயாரும் உனக்கு உடந்தையாய் இருந்ததுபற்றி வருந்துவதாகத் தெரிவி"—சரேலென்று இடுப்பிலிருந்த சிறு கூர்மையான ஆயுதத்தைக்கொண்டு தன்னைப் பலியிட்டுக்கொண்டாள். ரத்தக் கிளறியில் மூர்ச்சையுற்று—உயிரற்றுக் கிடக்கும் சாந்தாவைக் கண்டதும் அவன் தலை சுழன்றது.

வெகு நாட்களாக துன்மார்க்கத்தி லீடுபட்டுழன்று வந்த மூர்த்தி ஒரு "நரபலி" யினால், எதிர்காலத்தில் உத்தம புருஷனைக் காணப்பட்டான்.

# பெண் கல்வி எப்படி இருக்கவேண்டும்?

திருச்சி சாவித்திரி வித்தியாசாலையின் (பெண்கள் ஹைஸ்கூல்) புதுக்கட்டடத்தைத் திறந்து வைக்கும்பொழுது கனம் டாக்டர் ராஜன் ஆற்றிய சொற்பொழிவு:—

பல வருஷங்களாக நான் ஆடவர்களிடம் பேசிப் பேசி ஒன்றும் பயனில்லை. பெண்கட்குப் பிரசங்கம் செய்திருந்தால் அவர்கள் என் வார்த்தையைக் கேட்டிருப்பார்கள். என்றும் ஆண்மை யிழந்து அடிமை வாய்ப்பட்டுத் திண்டாடும் ஜன சமூகத்தில் தர்மம், ஆசாரம் இரண்டிற்கும் உறைவிடம் நமது பெண்கள் சமூகந்தான். இந்த தர்மத்தைக் காப்பாற்ற பெண்கள் தங்கள் பங்கை எடுத்துக்கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது. நல்லுணர்ச்சி, சமயப் பற்று, தெய்வ பக்தி, அஞ்சா நெஞ்சம், ஊக்கம் நமது பெண்மணிகளுக்கு உண்டாகும்படி படிப்பு கற்றுக் கொடுக்க வேண்டும்; ஆண் பிள்ளைகள் போல் பரிக்ஷை கொடுப்பதே லக்ஷியமாக இல்லாமல் நமது பெண்களைத் தட்டி எழுப்பக் கூடிய படிப்பு அவர்களுக்கு வேண்டிய முறையில் திட்டம் ஏற்படுத்தி நடத்த வேண்டும். வீட்டுக் கவலையை மறந்து பயத்தை யொழித்து சந்தோஷமாகப் பாடங்களை நமது குழந்தைகள் வாசிக்க வேண்டும். மிரட்டி அடித்துப் பயம் உண்டுபண்ணக் கூடாது. தாய்மார்களை விட்டு பாடசாலைக்குக் கூப்பிட்டதும் ஓடி வரும் வகையில் படிப்பு ஊட்ட வேண்டும். சங்கீதம், குலவாழ்க்கை, அழகு, லக்ஷணம் இவை அடிப்படையான முறையாக ஏற்படுத்த வேண்டும்.

ஆண் பெண் இருவரும் எல்லா சுக துக்கங்களிலும் சமமாகப் பங்கு எடுத்துக்கொள்ள வேண்டும். ஒழுக்கம், மனோ திடம், அடக்கம் ஊட்டி வைக்க வேண்டும். பெண்மணிகளிடம் கேவலமான எண்ணங்கள் ஒழிந்து புனிதமான எண்ணங்கள் உண்டு பண்ணி குணத்தினுலும், நடவடிக்கையாலும், குடித்தன வாழ்க்கையில், செய்யும் தொண்டினுலும், தேசத்தின் சன்மார்க்க முறையில், அவர்களும் பங்கு எடுத்துக்கொண்டு, நாட்டைப் புனிதமாக்க வேண்டும்.

# ஸ்திரீ தர்மம்

பம்பாய் கார்வே ஸ்திரீகள் சர்வகலாசாலே பட்டமளிப்பு விழாவில் பிரதம மந்திரி கனம் காரே நிகழ்த்திய சொற்பொழிவு:—

சமூக சீர்திருத்தத்தில் ஸ்திரீகளுக்கு அதிக செல்வாக்குண்டு. அவர்கள் நினைத்தால், சமூகத்தை எப்படி வேண்டுமாலுைம் மாற்றியமைக்க முடியும். ஏதாவதொரு நல்ல காரியத்தில் நீங்கள் தடை செய்தால், அந்த நல்ல காரியத்துக்கு பெரிய தீங்கு விளையும்.

## எதற்கும் கல்வி அவசியம்

ஸ்திரீகளில் அநேகர் வீட்டு வேலைகளை சரிவரச் செய்துவரும் காரியத்திலேயே ஈடுபட்டு வந்தும், சிலர் உத்தியோகத் துறைகளில் பிரவேசிக்க விரும்புகிறார்கள். அம்மாதிரி விரும்புவதில் ஒரு தவறும் கிடையாது. ஆனல் எந்த வேலைக்கும் கல்வி இன்றியமையாததென்பதை நீங்கள் உணர வேண்டும். கல்வியினல்தான் குறுகிய நோக்கங்கள் நசித்து பரந்த நோக்கமும் விசால புத்தியும் வளரும். ஸ்திரீகளின் ஒத்துழைப்பைக் கொண்டு புருஷர்களும் எல்லா மக்களும் முன்னேற முடியும். இப்பொழுது ஆண்கள் கல்விக்கும் பெண்கள் கல்விக்கும் சமமான வசதி அளிக்கப்பட்டு, கல்வி சம்பந்தமாக இருவருக்குமுள்ள வித்யாசங்கள் போக்கடிக்கப்பட வேண்டும்.

## கல்யாணம் மிகவும் அவசியமா?

ஒவ்வொரு பெண்ணும் கட்டாயமாய் விவாகம் செய்து கொள்ளத்தான் வேண்டுமாவென்று நீங்கள் என்னை இந்த சந்தர்ப்பத்தில் கேட்கக் கூடும். மனித வர்க்கத்தை முன்னேற்றும் தொண்டிலோ, தெய்வீகத் தொண்டிலோ ஈடுபட விரும்புகிறவர்களைப் பலாத்காரமாக விவாகம் செய்து வைக்க வேண்டியது அவசியம்தானு வென்றும் நீங்கள் கேட்கலாம். அம்மாதிரி மனேபாவமுள்ள பக்த மீராபாயையும், ஜனபாயையும் போலுள்ளவர்கள் கட்டாயம் மணந்து கொள்ளத்தான் வேண்டுமென்று நான் கூறவில்லை.

## எல்லோருக்கும் ஒரு புத்திதான்

ஸ்திரீகள் புருஷர்களை விட புத்தியில் குன்றந்தவர்களென்று நான் சொல்ல மாட்டேன். இது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுதான். புருஷர்களிலும் புத்திசாலி, புத்திசாலி யல்லாதவர்கள் என்றிருக்கலாம். அதுபோல் ஸ்திரீகளிலும் இருக்கலாம். ஒருவருக்கொருவர் தனிப்பட்ட முறையில் வித்யாசமிருக்க முடியுமே தவிர, ஆண்கள் புத்தி, பெண்கள் புத்தி யென்று வித்தியாசம் கிடையாது.

## ஸ்திரீகளுக்குள்ள அந்தஸ்து

ஸ்திரீகளின் அந்தஸ்து இப்பொழுது மிகவும் உயர்ந்திருக்கிறது. ஒருவருக்கொருவர் போட்டி போடும் மனப்பான்மையில்லாமல் சௌஜன்ய பாவத்திலேயே ஸ்திரீகள் மற்ற துறைகளிலும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். ஆண்கள் நிர்வகித்து வரும் எல்லா வேலைகளையும் பொறுப்புகளையும் ஸ்திரீகளும் நிர்வகிக்க அவர்களுக்கு பூர்ண உரிமையுண்டு. ஆனால் அவர்கள் இந்த விஷயத்தை மறுத்துவிடக் கூடாது. அதாவது நமது ஸ்திரீகளில் பெரும்பான்மையோருக்கு வீட்டிலுள்ள பொறுப்புகளை சரிவரச் செய்துவருவதே எல்லாவற்றிலும் முக்கியமான வேலையாகவிருக்க முடியும். ஸ்திரீகள் மற்ற துறைகளில் பிரவேசிக்கக் கூடாதென்று நான் கூறுவதாக நீங்கள் நினைக்கக்கூடாது.

## காப்பியடிக்க வேண்டாம்

இப்பொழுது நாம் மேல் நாட்டிலுள்ள கல்வி முறையைக் காப்பியடித்து வருகிறோம். அவர்கள் நிலைமை வேறு; நமது நிலைமை வேறு. நாம் நமது நாட்டிற்கு உகந்த முறையில் நமது கல்வியை மாற்றி யமைத்துக்கொள்ள வேண்டும்.

## மது விலக்கில் ஒத்துழைப்பு

நமது நாட்டில் அநேக சீர்திருத்தங்கள் செய்துகொண்டு வரும் இந்த சமயத்தில் ஸ்திரீகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். மது அரக்கனைக் கொல்ல ஸ்திரீகளும் ஒத்துழைக்கவேண்டும். வகுப்பு கலகத்தைத் தடுக்கவும், ஸ்வதேசியத்தைப் பிரசாரம் செய்யவும் ஸ்திரீகள் உதவிபுரிய வேண்டும்.

## சீதனம் கொடுக்கும், வாங்கும் வழக்கத்தால் வரும்

# பன்னிரண்டு தீமைகள்

கனம் ஜேம்ஸ் மேதர் (யாழ்ப்பாணம்) உடுவிலில் நடந்த ஒரு கூட்டத்திற் கூறியவை:—

"சீதனம் கொடுத்தல் வாங்குதலாகிய தீய வழக்கங் காரணமாக இந்நாட்டில் அனேக தீமைகள் விளையலாயின; அவற்றுட் பிரதானமானவை பன்னிரண்டு; அவை வருமாறு:—

(1) சீதன வழக்கம் ஆடவனைக் காட்டிலும் பெண்ணுக்கிருந்த மதிப்பைக் கெடுத்துவிட்டது.

(2) சீதனத்தினால் விவாகம் ஒரு வியாபாரமாக மாற அது விவாகத்தின் மகத்துவத்தையும் இல்லற தருமத்தையும் சிதைத்து விட்டது.

(3) இதனால் ஒரு குடும்பத்திற் பெண் குழந்தை பிறக்கும் போது பெற்றோர் முதலியோர் மகிழ்வதற்குப் பதிலாக இழவு கொண்டாடுகிறார்கள்.

(4) பெண் பிள்ளைக்குச் சீதனப் பணம் வேண்டுமென்ற நியாயத்தினால் பெற்றோர் அப்பிள்ளையைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிக் கல்வி பயிற்றுவிக்காது விடுகின்றனர்.

(5) பெண் பிள்ளைகளை வைத்திருப்பவர்கள் அப்பிள்ளைகளுக்கு சீதனங்கொடுத்து விவாகஞ் செய்துவைக்க முடியாமையினாலே கவலையால் மாளுகின்றனர்.

(6) வாலிபர்கள் அதிக சீதனத்திற்காக மதிப்பிழந்து சீதனமுள்ள பெண்களைத் தேடிப் போகிறார்கள். அவர்களுக்குப் பெண் மீது மெய்யன்பில்லாமற் போகின்றது. பெண்ணின் குணாதிசயங்களைப் பொருட்படுத்துகின்றிலர்; பெண் கொடுக்கும் மாமன் போதிய பணக்காரனா என்ற ஒன்றைத்தான் பார்க்கிறார்கள்.

(7) சீதன மில்லாமையினாற் கல்வி யறிவு ஒழுக்கங்களிற் சிறந்த கன்னியர்கள், திறமைவாய்ந்த மாப்பிள்ளைகள், இல்லறத்

தை இனிது கொண்டு நடாத்தக் கூடிய் குல மங்கையர் கரைசேர முடியாம லிருக்கிறார்கள்; சீதனமொன்று மாத்திர முடையவர்களாய் மேலே சொல்லப்பட்டன எவையு மில்லாதவர்கள் விரைவில் ஒரு கரைசேர்ந்து விடுகிறார்கள். இதனல் நாட்டின் நல விருத்திக்குப் பெரும் இடையூறு நேருகின்ற தெனலாம்.

(8) இந்நாட்டில் வியாச்சியங்கள் அதிகப்படுதற்கு இச்சீதன வழக்கம் பெரிய காரணமாகும்.

(9) வீட்டிலே குடும்பக் கலகங்களுக்கும் புருஷன் மனைவியர்க் கிடையே பிணக்கு நேர்வதற்கும் இச் சீதனம் முக்கிய காரணமாம்.

(10) சில பெற்றோர்கள் தங்களால் கொடுக்க முடியாத சீதனத்தைத் தருவதாகச் சொல்லி விட்டு விவாகம் நிறைவேறிய பின் சொன்னபடி கொடுக்கத் தவறியும் பொய் சொல்லியும் தம்பதிகளை அனுப்பியும் இடைஞ்சல் படுகின்றார்கள்.

(11) சீதனங் காரணமாகத் தம்பதிகள் வறுமையிற் செம்மையாக வாழ்வதை விடுத்து சிக்கனத்தை மறந்து டாம்பீகமாக வாழத் தலைப்பட்டுப் பொருளைத் துர்விநியோகஞ் செய்து விட்டு ஈற்றில் ஓட்டாண்டிகளாக இடர்ப்படுகிறார்கள்.

(12) படித்து விட்டு ஏதும் உத்யோகம் பார்க்கும் ஏழை வாலிபர்கள் பெருஞ் சீதனம் வாங்கிக் கல்யாணம் முடித்த பின் தங்களை மறந்து சீதனப் பணத்தைக் கொண்டு குடித்து வெறித்து இன்னுஞ் செய்யக் கூடாத பாதகங்களைச் செய்து ஈற்றில் அநியாயமாக மாளுகின்றார்கள்.

# ஹிந்து மதத்தைக் காப்பதில் ஸ்திரீகளே சிறந்தவர்கள்

திருநெல்வேலி சுதேசிப் பொருட்காட்சி மைதானத்தில் மத்தியசபை அங்கத்தினரான ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் செய்த பிரசங்கத்தின் சாராம்சமாவது:—

நமது தேச மக்களை ஒற்றுமைப் படுத்தி எப்படி சுகமாக வாழவைப்பது என்பதுதான் இன்றைய முக்கியப் பிரச்னை. இந்த உன்னத லக்ஷியத்தை அடைய மாதர்கள் எப்படி ஒத்தாசை செய்யலாமென்று யோஜிக்க வேண்டும். நம் தேச அபிவிருத்திக்காக சமூக ஒற்றுமை இன்றியமையாதது என்பதை எல்லாரும் உணர வேண்டும். பல வகுப்புகள் சமூகங்களுக் கிடையேயுள்ள பல வித்யாசங்களை மாற்றி, எல்லா வகுப்பு சமூகங்களுக்குள்ளும் ஒற்றுமையை உண்டு பண்ண அவரவர்களால் இயன்ற அளவு அவரவர்கள் செய்ய முயலவேண்டும். ஆண்கள் சமூக சீர்திருத்த விஷயங்களில், தாங்கள் பிரசங்க மேடைகளில் சொல்வதை அனுபவ சாத்யமாக்க முடியாததற்குக் காரணம், பெண்கள் பிற்போக்காயிருப்பதுதான் என்று சொல்வது சகஜம். ஆனால் இந்த குற்றச் சாட்டு நியாயமானதல்ல. பெண்கள், தேச முன்னேற்ற சௌகர்யங்களில் தாங்கள் ஆண்களுக்குப் பின் வாங்கினவர்களல்லவென்று ருஜுப்படுத்தி விடலாம். எவ்வளவு எழுதப் படிக்கத் தெரியாத ஸ்திரீயாயினும், தேச சமூக முன்னேற்ற விஷயங்களில் முன்னணியில் வந்து உழைக்கப் பின்வாங்குவதில்லை.

ஹரிஜனங்கள் விஷயத்தில் தீண்டாமையை விலக்குவது மிக மிக அவசியம். இதிலும் ஸ்திரீகளிடம் விஷயத்தின் முக்கிய அம்சத்தை எடுத்துச்சொல்லி, இது தேச விடுதலைக்கு இன்றியமையாததென்று எடுத்துரைத்தால், ஸ்திரீகள் ஹரிஜன முன்னேற்றத்திலும் ஆண்களுடன் ஒத்துழைக்க ஒருக்காலும் தயங்க மாட்டார்கள்.

# அன்பர்களுக்கு

இவ் விதழோடு "மாதர் மறுமண"த்திற்கு மூன்றுண்டுகளாகின்றன. மாதர் மறுமண இயக்கத்திற்காக வென்றே நடத்தப்படும் பத்திரிகை தமிழ் நாட்டில் "மாதர் மறுமணம்" ஒன்றுதான் என்பதை அன்பர்கள் அறிவார்கள். இவ்வியக்கத்தைப் பற்றி அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும்; எல்லோரும் "மாதர் மறுமண"த்தைப் படிக்க வேண்டும் என்பது எங்கள் பேரவா. அடுத்த ஆண்டு முதல் பத்திரிகையை இன்னும் அபிவிருத்தி செய்ய உத்தேசித்துள்ளோம். இவ்வியக்கப் பற்றுள்ள அன்பர்கள் தங்களால் முடிந்த மட்டும் சந்தாதார்களைச் சேர்த்துக் கொடுத்து பத்திரிகை வளர்ச்சியிலும், இயக்க வளர்ச்சியிலும் பங்கு கொள்ள வேண்டுகிறோம். சென்ற ஆண்டு கதைகள் கட்டுரைகள் பாக்கள் எழுதியுதவிய அன்பர்கட்கு எமது வந்தனம்.

—பத்திராதிபர்.

—

# :: நிகழ்ச்சிகள் ::

## ராஜ்காரில் சாரதாச் சட்டம்

ராஜ்கார் சமஸ்தானத்தில் குழந்தை மணத்தைத் தடுக்க சாரதாச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். தம்பதிகள் வயது முறையே 18, 12 ஆக இருக்க வேண்டும்.

## டப்ளினில் முதல் ஸ்திரீ மேயர்

ஸ்ரீமதி டாம் கிளார்க் என்ற பெண்மணி டப்ளின் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அயர்லாந்தின் சரித்திரத்திலேயே ஒரு பெண்மணி இந்த உயரிய பதவி வகிப்பது இதுதான் முதல் தடவையாகும். இவருக்கு வருஷம் 2500 பவுன் சம்பளம் கிடைக்கும்.

## ஜில்லா கோர்ட்டில் ஹரிஜனப்பெண்

மலையாளம் ஜில்லா போர்டில் ஸ்திரீகள் ஸ்தானத்தில் அங்கத்தினராக இருந்து வந்தவர் தமது பதவியை ராஜினமாச் செய்து விட்டார்; இருமுறை தேர்தல்

குறிப்பிடப்பட்டும், யாரும் தேர்த லுக்கு நிற்க முன்வரவில்லையாம். எனவே, ஜில்லா போர்டுகள் சட்டப்படி, ஜில்லா போர்டே காலியான ஸ்தானத்திற்கு ஸ்ரீமதி கே. சரோஜினி யெனும் ஹரிஜனப் பெண்ணை நியமிப்பதெனத் தீர்மானித்திருக்கிறது. மலையாளம் ஜில் போர்டில் ஒரு ஹரிஜனப் பெண் அங்கம் வகிப்பது இதுதான் முதல் தடவை. இவர், ஸ்ரீ இ. கண்ணனின் (M.L.A.) மனைவியாராகும்.

## பழனி ஆர்ய வைசிய சமூகத்தின் முதலாவது மறுமணம்

• இவ்வூர் ஸ்ரீ பி. விஸ்வநாதனுக்கும் மதுரை ஸ்ரீமதி செல்வ லெட்சுமிக்கும் வைசியாள் டவுன் சத்திரத்தில் 29-6-39 காலை 7-45 மணிக்கு புனர் விவாகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. உள்ளூர், வெளியூர்களிலிருந்து அனேக பிரபலஸ்தர்கள் வந்திருந்தனர். கதராடைகளும் வெள்ளி டம்ளரும் காரைக்குடி மாதர் மறுமண சகாய சங்கத்தாரால் அனுப்பப்பட்ட மாதர் மறுமணம் புத்தகமும், பரிசுகளாக வழங்கப்பட்டன. பலரிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்தன. பலர்பேசினர். சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு வைபவம் இனிது முடிந்தது.

## விவாக ரத்துக்கு ஆதரவு

• ஸ்ரீமதி லீலாவதி முன்ஷியின் பல தார விவாகத் தடை மசோதா ஸ்ரீ போகிளாவின் விவாக ரத்து மசோதா ஆகியவைகளை ஆதரித்து ஹுப்ளி, கட்டாக், தார்வம், ஹவேரி முதலிய கர்னாடகப் பிர தேசங்களில் நடந்த பெண்கள் கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

## பெண்களுக்கு வார்சுரிமை

பாளையங்கோட்டையில், மாதர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசும்போது ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் M. L. A. (இந்தியா) அடியில் வருமாறு குறிப்பிட்டார்:—

"வார்சுரிமைச் சட்டங்களை உடனே திருத்தியமைக்க வேண்டும். வார்சு பாத்தியதையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை அளிக்கவேண்டுமென்று நான் கூறவில்லை. சொத்துக்களில் என்னென்ன விகிதாசாரம் கொடுப்பதென்பதைச் சாவதானமாக நிர்ணயித்துக் கொள்ளலாம். ஆனால், பெண்களுக்கு வார்சுரிமை அளித்து அவர்களுக்கு சுய நம்பிக்கையும், சமத்வ உணர்ச்சியும் ஏற்படச் செய்யவேண்டும். ஆண்களுக்கில்லாத உரிமை யெதுவும் தங்கட்கு வேண்டுமென ஹிந்துப் பெண்கள் கோரவில்லை."

## பெண்களுக்கு கைத்தொழில்

கனம் வி. ஐ. முனிசாமி பிள்ளை மங்களபுரம் கைத்தொழிற் பள்ளிக் கூடத்தைத் திறந்து வைக்கையில் கீழ்வருமாறு பேசினார்: "பெண்கள் ஒழிந்த வேளைகளில் கைத்தொழில் ஏதாவது செய்யக் கற்றுக் கொண்டால் குடும்பத்திற்கு லாபம் ஏற்படுவதிருக்க சமூகத்தில் அனுவசியமாக ஏற்படும் சச்சரவுகள் பலவும் நிற்கும். ஸ்திரீகளுக்கு வேலை யொன்று மில்லாவிட்டால் அக்கம் பக்கத்து வீடுகளைப்பற்றி

வம்பு பேச ஆரம்பித்து விடுகிறார்கள். இதனால் பல கலகங்கள் ஏற்படுகின்றன. குடிசைத் தொழில் அபிவிருத்தியடைந்தால், இந்த வம்சச் சண்டைகளும் நிற்கும்.''

## படையாச்சிப் பெண்ணை பிராமணருக்கு மணம் முடித்து வைத்ததாக!

படையாச்சிப் பெண்ணை குண்டூரிலுள்ள ஒரு பிரா்மணருக்கு 400 ரூ. வாங்கிக்கொண்டு, பிராமணப் பெண்ணென்று சொல்லி ஏமாற்றி மணமுடித்து வைத்ததாக, ரத்தினம்மாள் என்பவளைப் போலீசார் தேடி வருகின்றனர். பெண் மண முடிந்து சில மாதங்கள் புருஷனோடு வாழ்ந்ததாயும், பின் திருப்பனந்தாளிலுள்ள தன் பெற்றோர் வீட்டுக்குச் சென்றதாயும் சொல்லப்படுகிறது. புருஷனே போலீசாரிடம் இவ்விஷயமாகப் புகார் செய்திருக்கிறார்.

## விதவா விவாகத்திற்கு பண உதவி

விதவா விவாகங்களுக்கு சமஸ்தான சர்க்கார் பண உதவி செய்யுமென மண்டி ராஜா அறிவித்திருக்கிறார். சமஸ்தானாதிபதி, சமீபத்தில் சுற்றுப் பிரயாணம் செய்கையில் பொறுப்பு வாய்ந்த பலர் அவரைச் சந்தித்து, மண்டி விதவைகள் வெளியார்களால் கடத்தப்பட்டு பிரிட்டிஷ் இந்தியாவில் மிகக் குறைவான விலைக்கு விற்கப்படுவதாகப் புகார் செய்தனர். சமஸ்தானாதிபதி, உடனே கிராம பிரமுகர்கள், சமூக சீர்திருத்தக்காரர்கள், அதிகாரிகள் ஆகியோரை மகாநாடு கூட்டி, அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டபின் விதவைகளைக் கல்யாணம் செய்து கொள்ளுகிறவர்களுக்கெல்லாம் பண உதவி செய்வதாக வாக்களித்தார்.

## ஆடம்பரமில்லா விவாகம்

ஜூலை 1உ யன்று ஷெயிக் பூராவுக்கருகிலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு சமூக சீர்திருத்தக்காரரின் குமாரிக்கும் லாகூர் காலேஜ் மாணவன் ஒருவனுக்கும் ஆடம்பரமற்ற முறையில் விவாகம் நடைபெற்றது. மணமகன் வரதக்ஷிணை எதுவும் பெறவில்லை. விருந்து கிடையாது. பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்கு அருந்த நீர்மோர் கொடுத்தனர். பல உத்தியோகஸ்தர்களும் அபிவிருத்தி மந்திரியும் ஆசிச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

## சாரதாச் சட்ட வழக்கு

கீழக்கரை சாகுல் ஹமீது, ஷேக் அப்துல் காதர் முதலிய ஆறு பேர் மீது சாரதா சட்டப்படி தொடர்ந்திருந்த வழக்கில், ராமனாதபுரம் ஜாயிண்ட் மாஜிஸ்திரேட் ஸ்ரீ எஸ். கே. செட்டூர் ஜூன் 27உ தீர்ப்புக் கூறினார். முதல் எதிரிக்கு ரூ. 100ம், மற்ற எதிரிகளுக்குத் தலா ரூ. 50 வீதமும் அபராதம் விதிக்கப்பட்டது. தவறினால் இரண்டு வார வெறுங்காவல். 25 வயதுக்கு மேற்பட்ட மாப்பிள்ளைக்கு (எதிரிகளில் ஒருவர்) பதினொன்றரை வயதுள்ள பெண்ணை மண முடித்து வைத்ததாக வழக்கு.

# சமூக சீர்திருத்தப் புத்தகங்கள்.

## "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு சகாயம்.

### கைம்பெண்ணின் கண்ணீர்.

இது ஆசிரியர் கே. வி. எஸ். வாஸ் அவர்களால் எழுதப்பட்டு மாதர் மறுமண சகாய சங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் விதவைப் பெண்கள் படுந்துயரமும் அதற்குச் செய்யவேண்டிய பரிகாரமும் தெளிவுபடக் கூறப்பட்டுள்ளன. விதவா விவாகம் சுருதி–யுக்தி– அனுபவபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்டதென்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இக்கட்டுரை முதலாவது பரிசு பெற்றதாகும். விலை அணா ஒன்று. தபாற் செலவு வேறு.

### மான நஷ்ட வழக்கு.

இது பெண்ணுக்குப் பணம் வாங்கிச் செய்ததற்காக பெண்ணின் தம்பி மைனர், மேஜரான பிறகு தன் குடும்பத்திற்கு அவமானம் வந்துவிட்டதென்று கோர்ட்டில் வழக்கிட்டு நீதிபெற்றதாக எழுதப்பட்ட ஒரு சிறு நூல். கோர்ட் நடவடிக்கையும் மலைவிழுங்கி முத்தப்ப செட்டியாரின் விசாரணை விவரங்களும் தீர்ப்பும் படிப்பவர்க்கு வெகு உற்சாக மூட்டக் கூடியன. விலை அணா ஒன்று. தபாற் செலவு வேறு.

### சொர்ணவல்லி.

இதில் அடுத்தாள் வேலையின் அவஸ்தை, பிரிந்த காதலர்களின் பெருந் துன்பம், தீர்த்த யாத்திரைக்குப் பெண்கள் சென்று படும்பாடு, பச்சிளம் பெண்கள் விதவையராக்கப்படும்கஷ்டங்கள் முதலிய பகுதிகளும், விதவைப் பெண் வைக்கும் ஒப்பாரியும் படிப்பவர் உள்ளத்தை உருக்கிவிடுவது திண்ணம். உபந்யாசங்களும் மேற்கோள்களும் சந்தர்ப்பத்துக்கேற்ற இனிய பாட்டுக்களும் நிறைந்து விளங்கும். எளிய அழகான நடையில் அமைந்துள்ளது. இதன் விலை ரூ. 1—0—0. "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—12—0. தபாற் செலவு வேறு.

### அமிர்தவல்லி மாலை.

இது நகரத்தார் பெருமையையும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும் விளக்குகிறது. பால்யப் பெண்களை மணம் செய்வதும் அதை விதவையாக்கிக் கண்ணீர் வடிப்பதும் எவ்வளவு கொடுமை யென்பதையும், அதனாலேற்படும் இன்னல்களையும் படிப்பவர் மனத்தில் பசுமரத்து ஆணிபோல் பதியச் செய்யும்படி அமைந்துள்ளது. யாவரும் எளிதில் பாடக்கூடிய இனியையான அம்மானைப் பாட்டில் பாடப்பட்டிருக்கிறது. விலை 0—4—0. 'மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—3—0. தபாற் செலவு வேறு

**மானேஜர், மாதர் மறுமணம் ஆபீஸ், காரைக்குடி.**

REGD. No. M. 3603.

# சிறந்த புத்தகங்கள்.

## மாதர் மறுமணப் பாடல் திரட்டு.

இது ஒரு சிறந்த பாடல்புத்தகம். இதில் 27-பாடல்கள் அடங்கியுள்ளன. இலக்கியப்பாடல்களும், புதுவகையான மெட்டுப் பாடல்களும் நிறைந்திருக்கின்றன. 64-பக்கமுள்ள இப் புத்தகத்தின் விலை இரண்டணாதான். தபாற்கூலி வேறு.

## ஜீவகாருண்யத் திருக்குறள்.

"வள்ளுவர் பாட்டின் வள முறைக்கின் வாய்மடுக்கும்" என்று புகழப்படும் திருக்குறளிலிருந்து ஜீவகாருண்ய சம்பந்தமான 20 குறளைப் பொறுக்கிப் பெரிய எழுத்தில் பொழிப்புரையுடன் அச்சிடப் பட்டிருக்கிறது. பள்ளிக்கூட மாணவர் பயில்வதற்கு மிக இன்றியமையாதது. விலை அணா அரை. மொத்தமாக வாங்கினால் விலை சகாயமாகத் தரப்படும். தபாற்கூலி வேறு.

## மாதர் மறுமணம்.

இப் பெயர்கொண்ட அழகிய புத்தகம் மகிபாலன்பட்டி திரு வாளர் மு. சின்னையா செட்டியாரவர்களால் இயற்றப்பெற்றது. அழகான நடை. நகரத்தார் சமூகத்திற்கு மாதர் மறுமணம் எவ்வளவு அவசியமென்பதற்குக் காரணங்களைப் பசுமரத்தாணியெனப் பதியும்படி எழுதியிருக்கிறார்கள். உதாரணமாகக் கூறப்படும் ஏழு கதைகள் வியக்கத்தக்கனவாகும். அழகான புத்தகம் விலை 0—4—0 "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு 0—3—0. தபாற் செலவு வேறு.

## காசில்லாமல் உபதேசம்.

பஞ்சாட்சர உபதேசம் செய்வதற்கு ஆடம்பரமும் அனாவசியமான தடபுடலும் வேண்டியதில்லை யென்பதற்கு வேண்டிய காரணங்கள் இதில் விளக்கப் பட்டிருக்கிறது. அதோடு தண்ணீர் மந்திரமும் இதில் சொல்லப் பட்டிருக்கிறது. விலை அணா ஒன்று. தபாற்கூலி வேறு.

## மாதர் மறுமண பென்ஸில்

"விதவை மணமே விடுதலை அளிக்கும்" என்னும் வாக்கியம் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ள அழகான பென்சில். நல்ல நிறம். சுகமாக எழுதக்கூடியது. இந்தியாவில் செய்யப்பெற்றது.

| | |
|---|---|
| விலை பென்சில் 1-க்கு | 0—0—6 |
| டஜன் 1-க்கு | 0—5—0 |
| குரோஸ் 1-க்கு | 3—6—0 |

தபாற்செலவு வேறு.

Printed and Published by S. MURUGAPPA for the Mathar Marumana Sahaya Sangam at Kumaran Power Press, Karaikudi.
Editor: M. Maragathavalli.